பக்கங்கள்: 12

விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 04 வள்ளுவர் ஆண்டு 2051 ஆடி 01 வியாழக்கிழமை 16.07.2020 கதிர் 249

### இது ரகசியம் அல்ல!

கொரோனா நடவடிக்கைத் தீவிரத்துக்கு மத்தியில் நல்லூர் திருவிழா வரப்போகின்றது.

அடுத்த வாரம் திருவிழா ஆரம்பம். என்ன செய்வது என்று தெரியாமல் கையைப் பிசைகின்றது யாழ்.மாநகரச சபை.

பொறுத்த சமயத் பக்கம்02 »

# கொரோனா குறித்து உண்மை கூறுங்கள்!

## அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளது அரச வைத்திய அதிகாரிகளின் சங்கம்

கொழும்பு, ஜூலை 16

கொரோனாவைரஸ்தொற்று பரவுவது தொடர்பான தகவல்களை மக்களுக்கு அறிவிப்பது சுகாதார பொறுப்பு எனவும் தற்போது வழங்கப்பட்டுள்ள தெளிவுபடுத்தல் போதுமானதாக இல்லை எனவும் அரச வைத்திய அதிகாரிகளின் சங்கம் குறிப்பிட்டுள்ளது. பக்கம் 02 »

# கொரோனா தாண்டவமாடினால் மீண்டும் ஊரடங்குச் சட்டம் அமுல்

## சுகாதார சேவைகள் பணிப்பாளர் எச்சரிக்கை



கொழும்பு, ஜூலை 16

இலங்கையில் கொரோனா வைரஸ் வேகமாகப் பரவினால் மீண்டும் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்க வேண்டிய நிலை ஏற்படக்கூடும்.

–இவ்வாறு சுகாதாரசேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்திய கலாநிதி அனில் ஜாசிங்க தெரிவித்தார். பக்கம் 02 »

## *கொரோனா தொற்று அச்சநிலை;*

# சிறையில் உள்ள அரசியல் கைதிகளை பிணையிலாவது விடுவிக்கவேண்டும்!

## ஜனாதிபதிக்கு மாவை கடிதம்

யாழ்ப்பாணம், ஜூலை 16

கொரோனாவைரஸ்தொற்று பரவல் காரணமாக அச்சுறுத்தலுக்குள்ளாகியுள்ள தமிழ் அரசியல் கைதிகள் அனைவரையும் பிணையில் விடுவிக்க வேண்டும் என்று தமிழ் அரசுக் கட்சியின் பக்கம் 02 »

# தமிழர் விரும்பும் தீர்வை அரசு வழங்கவேமாட்டாது

## சம்பந்தனின் கருத்துக்கு ராஜபக்ஷ அரசு பதிலடி



கொழும்பு, ஜூலை 16

தமிழ் மக்களோ அல்லது சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரோ விரும்புகின்ற தீர்வை அரசு வழங்கவேமாட்டாது.

–இவ்வாறு ராஜபக்ஷ அரசின் பேச்சாளரும் முன்னாள் இராஜாங்க அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார். பக்கம் 02 »

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கே வடக்கு முஸ்லிம்களின் வாக்குகள்!

## முஸ்லிம் ஆதரவாளர் வட்டம் அறிவிப்பு




யாழ்ப்பாணம், ஜூலை 16

வடக்கு முஸ்லிம் மக்கள் இம்முறை தமது வாக்குகளை தமிழ் மக்கள் நீண்டகாலமாக ஆதரித்து மக்கள் ஆணையை (வாக்குகளை) வழங்கி வரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு – வீட்டுச் சின்னத்துக்கு– வழங்குவதன் ஊடாக ஒரு முன்மாதிரி மிக்க நகர்வை முன்னெடுக்கமுடியும் என நாம் நம்புகின்றோம்.

– இவ்வாறு தெரிவித்துள்ளது பக்கம் 11 »




# ரிஷாத் மீதான விசாரணைகளை ஓகஸ்ட் 20 வரை ஒத்திவைக்குக!

## பொலிஸ்மா அதிபருக்கு நேற்று தேர்தல்கள் ஆணைக்குழு கடிதம்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஜூலை 16.

ரிஷாத் பதீயுதீன் தொடர்பான விசாரணைகள், வாக்குமூலங்கள் பெறும் நடவடிக்கைகளை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 20ஆம் திகதி வரை ஒத்திவைக்குமாறு பொலிஸ்மா அதிபருக்கு தேர்தல்கள் ஆணைக்குழு நேற்று அவசர கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

தேர்தல் காலத்தில் வேண்டுமென்றே உள்நோக்கத்துடன் தொடர்ச்சியாக விசாரணை மேற்கொள்ளப்படுகின்றது என்றும், கொழும்புக்கு அடிக்கடி அழைக்கப்பட்டு பரப்புரையில் பக்கம் 02 »

# 2 வேட்பாளர்கள் யாழில் மரணம்!

யாழ்ப்பாணம், ஜூலை 16

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் சுயேச்சைக் குழுவில் போட்டியிடும் இரண்டு வேட்பாளர்கள் உயிரிழந்துள்ளனர். பக்கம் 02 »

# கிளிநொச்சி வளாகம் இன்று மீளத் திறப்பு

## விடுதி மாணவர்கள் வெளியேறத் தடை

யாழ்ப்பாணம், ஜூலை 16

யாழ்.பல்கலைக்கழக கிளிநொச்சி வளாகத்தில் உள்ள விவசாயம், தொழில்நுட்ப பீடங்களின் விடுதியில் உள்ள இறுதி ஆண்டு மாணவர்கள் அனைவரும் பரீட்சைகள் நிறைவடையும் நாள்வரை வளாகத்தைவிட்டு வெளியேற முடியாது என்று மத்திய சுகாதார அமைச்சால் அறிவுறுத்தல் பக்கம் 02 »



## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தில், தேர்தலில் போட்டியிடுவதற்காக மேயர் ஆர்னோல்ட் விடுமுறையில். பதில் முதல்வர் ஈசன் தடுமாறுகின்றார்.

காலங்காலமாக அங்கப்பிரதட்சணம் செய்த தீவிர பக்தர்களில் இருந்து தினமும் திருவிழாவுக்காகத் திரளாகக் கூடக் கூடிய பக்தர்களை வரை எல்லோரையும் எப்படிக் கட்டுப்படுத்துவது என்று தெரியாமல் மாநகர சபை நிர்வாகம் முழுசுகின்றது.

யாழ்.மாநகர சுகாதார வைத்திய அதிகாரி திருவிழாவை ஒட்டிய கடும் சுகாதாரக் கட்டுப்பாடுகள அறிவித்து விட்டார்.

அவற்றைப் பார்த்தால் வழமையாக நல்லூரில் வெள்ளிக்கிழமையில் திரளும் பக்தர்கள் கூட திருவிழா நாள்களில் அந்தப் பக்கம் செல்ல முடியாது போலும்.

மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையில் பக்தர்களை அனுமதிப்பது என்றாலும் கூட யாருக்கு முன்னுரிமை என்ற சர்ச்சை வரும்.

யாழ்.மாநகர சுகாதாரப் பகுதி அதிகாரி அறிவித்த விதிமுறைகளை முழுமையாக நடைமுறைப்படுத்துவது என்றால், ஆலயச் சுற்றாடலில் இம்முறை வெள்ளை மணல் கொட்டவே தேவையில்லை.

ஆனால், கடந்த வாரம் நடைபெற்ற யாழ்.மாநகர சபையின் கூட்டத்தில் நூறு டிராக்டர் லோட் மண் கொள்வனவு செய்து கொட்டுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுவிட்டது. பல லட்சங்களை சுளையாக ஏப்பமிடும் நடவடிக்கை இது.

ஆனால் கடந்த வாரம் நடைபெற்ற இந்த மாநகர சபைக் கூட்டத்திலிருந்து, அது தொடர்பான கூட்ட முன்னறிவித்தல் உரிய காலத்தில் வழங்கப்படவில்லை என்று தெரிவித்து ஆளும் கட்சியான தமிழ்க் கூட்டமைப்பின 13 உறுப்பினர்களும் வெளிநடப்புச் செய்திருந்தனர்.

அதன் பின்னர் எஞ்சியிருந்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் மற்றும் ஈ.பி.டி.பியினரை வைத்துக் கொண்டு கூட்டத்தைத் தொடர்ந்து நடத்தினார் பதில் முதல்வர் ஈசன். அந்தக் கூட்டத்திலேயே நூறு டிராக்டர் லோட் மணலை நல்லூரில் கொட்டுவது குறித்துத் தீர்மானிக்கப்பட்டது.

ஆனால், அந்தக் கூட்டம் கூட்டப்பட்டது முறையற்றது என ஆளும் கூட்டமைப்பு உறுப்பினர்கள் வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளரிடம் எழுத்து மூலம் முறைப்பாடு செய்திருக்கின்றனர்.

அந்த முறைப்பாட்டைப் பரிசீலித்த ஆணையாளர், அக் கூட்டம் வெற்றும் வறிதானதும் எனத் தெரிவிக்கும் பரிந்துரைக் கடிதத்தை ஆளுநருக்கு வழங்கியிருக்கின்றார் என்று நம்பகமாக அறியவந்தது.

அந்தப் பரிந்துரைக் கடிதத்தின் பிரகாரம் நடைபெற்று முடிந்த அந்தக் கூட்டத்தை செல்லுபடியற்றது எனத் தெரிவிக்கும் முடிவை ஆளுநர், அடுத்து வரும் நாள்களில் யாழ்.மாநகர சபைக்குத் தெரிவிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

அப்படியான அறிவித்தல் கிடைத்ததும் மணல் கொட்டுவதற்கு அளிக்கப்பட்ட சபைக் கூட்ட அங்கீகாரமும் செயல் இழந்து போய்விடும்.

திருவிழா விமரிசையாக – வழமையான தடபுடல் ஏற்பாடுகளுடன் நடக்காத இடத்து – அங்கப் பிரதட்சணத்துக்கோ, அடியளிப்புக்கோ பக்தர்கள் அனுமதிக்கப்படாத இடத்து –

இம்முறை நல்லூர் சுற்றாடலில் மண் கொட்டுதல், வீதிகளை மூடுதல் போன்றவை நடைபெறாமல் போகலாம்.

எல்லாம் முருகன் செயல்...!

–மின்னல்–

---

## 2 வேட்பாளர்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விபத்து காரணமாக ஒருவரும் மாரடைப்பால் ஒருவரும் நேற்று புதன்கிழமை உயிரிழந்தனர்.

விடுதலைப்புலிகள் மக்கள் பேரவை சார்பாக சுயேச்சைக் குழு 14 இல் போட்டியிடும் வேட்பாளர் அகஸ்தீன் மக்டொனால்ட் என்ற 58 வயதுடைய நபர் மாரடைப்பால் காலமானார். கடந்த 8ஆம் திகதி பூநகரியில் இடம்பெற்ற டிப்பருடனான விபத்தில் சிக்கிச் சிகிச்சை பெற்று வந்த பிரியதர்சன் என்ற சுயேச்சைக்குழு 3 இல் போட்டியிடும் வேட்பாளர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்த மற்றவராவார்.

தேர்தலுக்கான பிரசார நடவடிக்கைகளை ஒவ்வொரு கட்சியும் தீவிரமாக முன்னெடுத்து வந்த நிலையிலே நேற்று இந்த மரணங்கள் சம்பவித்துள்ளமை பலரையும் சோகத்தில் ஆழ்த்தியுள்ளது.

---

## சிறையில உள்ள...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைவரும் யாழ். மாவட்ட வேட்பாளருமான மாவை சேனாதிராசா, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் ஜனாதிபதிக்குக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

அந்தக் கடிதத்தின் பிரதிகளை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கும், நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவுக்கும் அனுப்பியிருக்கிறார்.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:–

பயங்கரவாதத் தடைச் சட்டம் அல்லது அவசர காலச்சட்டத்தின் கீழ் கடந்த 10 முதல் 24 வருட காலமாக தமிழ் அரசியல் கைதிகள் பலர் சிறைகளில் உள்ளனர். தற்போதைய கொரோனா வைரஸ் பரவல் சூழ்நிலையில் சிறைகளிலுள்ள அரசியல் கைதிகளின் உளநிலையையும், அவர்களது அடிப்படை மனித உரிமைகளையும் கருத்திற்கொண்டு வெளிநாடுகளைப் போன்று அவர்களைப் பிணையில் விடுதலை செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தமிழ் அரசியல் கைதிகள் நான்கு வகைகளின் கீழ் அடங்குகின்றனர். நீதிமன்றத்தினால் தண்டனை வழங்கப்பட்டு அவர்களுக்குரிய தண்டனையை அனுபவிக்கும் கைதிகள், விசாரணை முடிவுகள் நிலுவையிலுள்ள கைதிகள், சந்தேகத்திற்கிடமான வகையில் கைது செய்யப்பட்டுத் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள போதிலும் இன்னமும் குற்றச்சாட்டுக்கள் எவையும் சுமத்தப்படாத கைதிகள், தடுப்புக்காவல் உத்தரவு மற்றும் குற்றவியல் விசாரணைத்துறையின் கீழ் சிறைகளில் வைக்கப்பட்டுள்ள கைதிகள் ஆகியோரே அவர்களாவர்.

தற்போது சில சிறைக்கைதிகள் கோரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகியிருக்கின்றமை கண்டறியப்பட்டிருப்பதுடன், ஏனையோருக்கு தொற்றுப்பரவக்கூடிய ஆபத்துக்களும் காணப்படுகின்றன. இப்போது அவர்களது உறவினர்கள் சென்று பார்வையிடுவதற்கும் அனுமதி மறுக்கப்பட்டுள்ளமையால் கைதிகள் உளவியல் ரீதியான அழுத்தத்துக்கும் உள்ளாகியிருக்கிறார்கள்.

வெளிநாடுகளில் இவ்வாறு நீண்டகாலமாக சிறைச்சாலைகளில் தடுத்துவைக்கப்பட்டிருந்த கைதிகள் நீதிமன்ற உத்தரவின் பிரகாரம் தற்காலிகமாக விடுதலை செய்யப்பட்டு, அவர்களது வீடுகளில் தடுத்துவைக்கப்பட்டிருக்கிறார்கள். மேலும் சிலர் பிணையில் அல்லது நிபந்தனைகளின் அடிப்படையில் விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்கள்.

எனவே தற்போதைய கொரோனா வைரஸ் பரவல் சூழ்நிலையில் சிறைகளிலுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் உளநிலையையும், அவர்களது அடிப்படை மனித உரிமைகளையும் கருத்திற்கொண்டு வெளிநாடுகளைப் போன்று அவர்களைப் பிணையில் விடுதலை செய்வதற்கேனும் நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன் – என்றுள்ளது.

---

## கொரோனா தாண்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் தெரிவித்ததாவது: –

நாட்டின் தற்போதைய சூழ்நிலையின் பிரகாரம் ஊரடங்கு பிறப்பிக்கவேண்டிய தேவை ஏற்படவில்லை. ஓரிரு இடங்களிலேயே பிரச்சினை இருக்கின்றது. நாடு தழுவிய ரீதியில் வைரஸ் தாக்கம் இருந்தால்தான் ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்துவது தொடர்பில் பரிசீலிக்கக் கூடியதாக இருக்கும்.

கொரோனா வைரஸ் பரவல் அதிகரித்தால் ஊரடங்குச் சட்ட நடவடிக்கைகளுக்குச் செல்லவேண்டி ஏற்படும். அதற்கான தேவை தற்போது எழவில்லை. எதிர்காலத்திலும் அவ்வாறானதொரு நிலை உருவாகாது என நம்புகின்றோம் – என்றார்.

## தமிழர் விரும்பும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

'தமிழர்கள் இந்த நாட்டின் பிரஜைகள். எனவே, தமிழர்களுக்கான உரிமைகளை, அரசியல் தீர்வை அரசு வழங்கியே ஆகவேண்டும். அது அரசின் கடமையாகும். அதற்காக அரசிடம் நாம் அடிபணியமாட்டோம். தமிழ் மக்கள் விரும்பும் நியாயமான தீர்வை வழங்க அரசு முன்வந்தால் அதை நாம் மனதார ஏற்போம்' என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் திருகோணமலையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பில் ராஜபக்ஷ அரசின் பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெலவிடம் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

தமிழர்களும் இந்த நாட்டின் பிரஜைகள். முஸ்லிம்களும் இந்த நாட்டின் பிரஜைகள். சிங்களவர்களும் இந்த நாட்டின் பிரஜைகள். எனவே, எமது புதிய ஆட்சியில் தமிழர்களுக்கெனத் தனியான அரசியல் தீர்வை எம்மால் வழங்க முடியாது. தமிழ் மக்களோ அல்லது சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரோ விரும்புகின்ற தீர்வையும் எம்மால் வழங்க முடியாது. தமிழ் – முஸ்லிம் – சிங்களம் என மூவின மக்களுக்கும் உரித்தான தீர்வை மட்டுமே எம்மால் வழங்க முடியும். நாடாளுமன்றத்தின் மூன்றிலிரண்டு அங்கீகாரத்துடனேயே இந்தத் தீர்வை வழங்குவோம். 'அதியுச்ச அதிகாரப் பகிர்வுடனான தீர்வு' என்று சம்பந்தன் கேட்பது சமஷ்டி தீர்வே. இந்த சமஷ்டி தீர்வுக்கு ராஜபக்ஷ அரசில் இடமேயில்லை – என்றார்.

---

## கிளிநொச்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழங்கப்பட்டுள்ளது.

அனைத்து மாணவர்களும் வளாகத்துக்குள் நடமாட முடியும். எனினும் எந்தவொரு மாணவரும் வளாகத்தைவிட்டு வெளியேறி மீள வளாகத்துக்குள் வர முடியாது என்று அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் யாழ். பல்கலைக்கழக கிளிநொச்சி வளாகத்தில் உள்ள விவசாயம், பொறியியல் மற்றும் தொழில்நுட்ப பீடங்களின் பரீட்சை நடவடிக்கைகள் இன்று வழமைக்குத் திரும்பும் என்று வளாகத்துக்குப் பொறுப்பான பிரதிப் பதிவாளர் அறிவித்துள்ளார்.

யாழ். பல்கலைக்கழக கிளிநொச்சி வளாகத்தில் அமைந்துள்ள தொழில்நுட்ப பீடத்தில் கல்வி பயிலும் மாணவிக்கு கொரோனா தொற்று ஏற்படவில்லை என அவரது உயிரியல் மாதிரிகளின் பி.சி.ஆர் பரிசோதனையில் தெரியவந்துள்ளது. அவரது பெற்றோரின் பி.சி.ஆர் பரிசோதனை முடிவிலும் தொற்று இல்லை என்று தெரியவந்தது.

அதனால் யாழ். பல்கலைக்கழகத்தின் கிளிநொச்சி வளாகத்தை மீளத் திறந்த இறுதி ஆண்டு மாணவர்களுக்கான பரீட்சையை நடத்துவது தொடர்பில் புதிய கட்டுப்பாட்டுடன் சுகாதாரத் துறையினரால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

யாழ். பல்கலைக்கழக கிளிநொச்சி வளாகத்தில் உள்ள விவசாயம், தொழில்நுட்ப பீடங்களின் விடுதியில் உள்ள இறுதி ஆண்டு மாணவர்கள் அனைவரும் பரீட்சைகள் நிறைவடையும் நாள்வரை வளாகத்தைவிட்டு வெளியேற முடியாது.

அனைத்து மாணவர்களும் வளாகத்துக்குள் நடமாட முடியும். எனினும் எந்தவொரு மாணவரும் வளாகத்தைவிட்டு வெளியேறி மீள வளாகத்துக்குள் வர முடியாது. அவர்களுக்கான உணவு வழங்கப்படவேண்டும்.

அத்தோடு விடுதியில் ஒரு அறையில் ஒரு மாணவர் மட்டுமே தங்கியிருக்க முடியும். மாணவர்கள் சமூக இடைவெளியைப் பின்பற்றவேண்டும். அனைத்து மாணவர்களும் முகக் கவசம் அணிவதோடு அடிக்கடி கைகளை உரிய தொற்று நீக்கிகொண்டு கழுவுதல்வேண்டும்.

எந்தவொரு வெளிமாவட்ட மாணவரும் வீடு சென்று திரும்பிவர அனுமதிக்கப்படமாட்டார்கள் என்று மத்திய சுகாதார அமைச்சால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

# மூன்று மாதங்களாக ஜனாதிபதி கோட்டா தூக்கத்திலா என்று மனோ கேள்வி

கொழும்பு, ஜூலை 16

கொரோனா வைரஸ் பரிசோதனைகளை அதிகரிக்க வேண்டுமென கூறும் ஜனாதிபதி மூன்று மாதங்கள் தூக்கத்தில் இருந்தாரா என மனோ கணேசன் கேள்வி எழுப்பியுள்ளார்.

தனது முகப் புத்தகப் பக்கத்தில் கருத்து வெளியிட்ட போதே அவர் இதைத் தெரிவித்துள்ளார்.

கொறொனா பரிசோதனைகளை அதிகரியுங்கள் என இன்று ஜனாதிபதி கூறுகிறார். இவ்வாறென்றால் மூன்று மாத உறக்கத்தில் இருந்து இன்றுதான் அவர் விழித்தாரா?

கொரோனா வைரஸ் தொற்று நோய்க்கு உள்ளானவர்கள் எனச் சந்தேகப்படக் கூடியவர்கள் இந்நாட்டில் 40 ஆயிரம் பேர் இருக்கிறார்கள் என்றும் அவர்களை கண்டறிய உடன் பரிசோதனைகளை அதிகரியுங்கள் என்றும் மூன்று மாதங்களுக்கு முன்னரே தாம் கூறினார் எனவும் மனோ கணேசன் சுட்டிக்காட்டினார்.

---

## ரிஷாத் மீதான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஈடுபடாது தடுக்கும் நோக்கில் பொலிஸார் செயற்படுவதால் நானும் எனது கட்சியைச் சேர்ந்த 30 பேரும் பாதிப்படைவதோடு தொடர் மன அழுத்தம் காரணமாக நோய்த் தாக்கமும் ஏற்படுவதாகவும், நோய்க்கு மருத்துவத்துக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டால் அங்கும் சோதனையில் ஈடுபடுவதாகவும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாத் பதியுதீன் தேர்தல்கள் ஆணைக்குழுவின் கவனத்துக்கு நேற்றுக் காலை அவசரமாகத் தெரியப்படுத்தினார்.

இந்த முறைப்பாட்டை ஆராய்ந்த ஆணைக்குழு, ரிஷாத் பதியுதீன் தொடர்பான விசாரணை நடவடிக்கைகளை ஓகஸ்ட் 20ஆம் திகதிவரை இடை நிறுத்துமாறு பொலிஸ்மா அதிபருக்கு அவசர கடிதம் அனுப்பியுள்ளது.

இதேநேரம் ரிஷாத் பதீயுதீன் சுகயீனம் காரணமாக நேற்று மன்னார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த வேளை, அவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளமை உண்மையா என பொலிஸார் வைத்தியசாலைக்கு சென்று ஆராய்ந்துள்ளனர். இதனை அடுத்து மாலையில் ரிஷாத் பதியுதீன் கொழும்பு வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

---

## கொரோனா குறித்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது குறித்து சங்கத்தின் செயலாளர் மருத்துவர் ஹரித அலுத்கே தெரிவிக்கையில் –

நாங்கள் அன்றும் சொன்னோம். இன்றும் சொல்கிறோம். மக்களுக்கு இங்கு இருக்கும் உண்மையான நிலையை விளக்குவது சுகாதார அமைச்சு, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் உட்பட அந்த அதிகாரிகளின் பொறுப்பு. பொய் கூறுகிறார்கள் என்பதல்ல இதன் விளக்கம். ஆனால் விளக்கங்கள் போதா. இப்போது பொசிடிவ் எனக் கூறியவர்களுக்கு நெகட்டிவ் என்கிறார்கள். அப்படி நிகழ்வதற்கான காரணத்தை விளக்க வேண்டும். குண்டசாலை பிரதேசத்தில் நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டார்கள் எனக் கூறினால்தான் குண்டசாலையில் உள்ள மக்களை பாதுகாப்பாக இருக்க முடியும். அதைக் கூட நேரம் எடுக்கும் ஒவ்வொரு நிமிடமும் அந்தப் பகுதியில் நோய் பரவும் அபாயம் அதிகம். எனவே, நாங்கள் குறிப்பாக சுகாதார அமைச்சுக்கு நினைவுபடுத்துகிறோம். அனைத்துத் தகவல்களும் தாமதமின்றிச் சரியான விளக்கங்களுடன் பொதுமக்களுக்குக் கிடைக்க வேண்டும் என்பதை நாங்கள் வலியுறுத்துகிறோம்– என்றார்.

### தனது பிரதேசத்தில் எவராவது

# கொரோனாத் தொற்றினால் பலியானார் சடலத்துடன் ஜனாதிபதி செயலகத்துக்கு!

## செல்வாராம் மேர்வின் சில்வா

தனது பிரதேசத்தில் எவராவது கொரோனாத் தொற்றால் உயிரிழுந்தால் அவரின் சடலத்தைத் தாம் ஜனாதிபதி செயலகத்துக்கு எடுத்துச் செல்லவுள் ளார் என முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

நேற்று அவர் நடத்திய ஊடக சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்துள்ளார்.

நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் கொரோனாத் தொற்றாளர்கள் உள்ளனர் எனத் தெரிவிக்கப் படும் இந்த நேரத்தில் அரசாங்கத்தின் நற்பெயரைப் பாதுகாக்க உள்ளூர் மற்றும் சர்வதேச சுகாதார அதிகாரிகளின் ஆலோசனையைப் பின்பற்ற வேண்டும் என அவர் அரசுக்கு ஆலோசனை வழுங்கியுள்ளார்.

ருவான்வெலிசயா அருகே ஜனாதிபதி பதவி யேற்றமையால், மன்னர் துட்டகைமுனு மற்றும் அனாகரிக தர்மபாலா ஆகியோரின் கொள்கை யைப் பின்பற்றி மாட்டிறைச்சிக் கடைகள், விபச்சார விடுதிகள் மற்றும் விடுதிகள் மூடப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# இராஜாங்கனைப் பகுதி தொடர்ந்தும் முடக்கம்!

### 12 ஆயிரம் பேர் வெளியேற முடியாது

கொரோனா வைரஸ் தாக்கத்தையடுத்து அநுராதபுரம் மாவட்டத்தின் இராஜாங்கனைப் பிரதேசம் தொடர்ந்து முடக்கப்பட்ட நிலையிலேயே இருக்கின்றது என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்திய கலாநிதி அனில் ஜாசிங்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இராஜாங்கனைப் பிரதேசத்தில் மூன்று பிரிவுகளில் சுமார் 12 ஆயிரம் பேர் வாழ்கின்றனர். எவரும் வெளியே செல்ல முடியாது. வெளியிலிருந்து எவரும் உள்ளே வரமுடியாது.

ஏனைய பிரதேசங்களிலும் எவராவது கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டால் இதே நடைமுறை தொடரும். இவ்வாறு செய்தால்தான் வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தி மக்களைப் பாதுகாக்க முடியும் - என்றார்.

# வீதிகளில் குப்பை கொட்டிய நால்வருக்கு கொரோனாச் சட்டத்தின் கீழ் தண்டனை

### தலா பத்தாயிரம் ரூபா அபராதம் விதிப்பு

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஜூலை 16

யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைப் பரப்பிற்குள் வீதிகளில் குப்பை கொட்டிய ஐவருக்கு எதிராக முதல் தடவையாக யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் நோய்த் தடுப்பும் தனிமைப்படுத்தலும் சட்டத்தின் கீழ் வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட நிலையில் அவர்களுக்குத் தலா 10 ஆயிரம் ரூபா தண்டப் பணம் விதிக்கப்பட்டது.

மாநகர எல்லைப் பகுதிக்குள் பொது இடத்தில் குப்பை கொட்டியவர்கள் மீது கடந்த பத்தாம் திகதியன்று 5 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன . அவ்வாறு தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் நேற்றைய தினம் யாழ் மேலதிக நீதிவான் நளினி சுதாகரன் முன்னிலையில் விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டன.

இதில் மன்றுக்கு சமுகமளித்திருந்த 04 பேரும் குற்றத்தை ஒப்புக் கொண்டமையினால் அவர்களுக்குத் தலா 10 ஆயிரம் ரூபா வீதம் 40 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

மன்றுக்கு சமுகமளிக்காத ஒருவருக்கு அழைப்பாணை அனுப்புமாறும் மன்று கட்டளையிட்டது.

# வயோதிபப் பெண்ணைக் கத்தியைக் காட்டி அச்சுறுத்தி நகைகளை கொள்ளையிட்ட மூவர் வசமாகச் சிக்கினர்

யாழ்ப்பாணம், ஜூலை 16

தனித்து வாழ்ந்த வயோதிப் பெண்ணை கத்தியைக் காட்டி அச்சுறுத்தி 5 லட்சம் ரூபா பெறுமதியான நகைகள் மற்றும் 25 ஆயிரம் ரூபா பணத்தைக் கொள்ளையிட்டுத் தப்பித்த கொள்ளையர்கள் மூவர் வல்வெட்டித்துறைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தொண்டமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்துக்கு அண்மையில் உள்ள வீடொன்றில் இந்தக் கொள்ளைச் சம்பவம் கடந்த 8ஆம் திகதி பட்டப்பகலில் இடம்பெற்றது. சந்தேக நபர்கள் மூவரில் இருவர் புன்னாலைக்கட்டுவன் அன்னமார் கோவிலடியிலும் ஒருவர் ஏழாலையிலும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மகேஸ்வரி (வயது - 78) என்ற வயோதிப் பெண்ணின் வீட்டுக்குள் கடந்த 8ஆம் திகதி மதியம் முகங்களை மூடியவாறு 3 பேர் நுழைந்துள்ளனர். அவரின் கழுத்தில் கத்தியை வைத்து அச்சுறுத்தி ரூபா 5 லட்சம் பெறுமதியான நகையும் ரூபா 25 ஆயிரம் பணத்தையும் கொள்ளையிட்டுத் தப்பித்தனர்.

இந்தக் கொள்ளைச் சம்பவம் தொடர்பில் அன்றைய தினம் வயோதிப் பெண்ணால் வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. அந்தப் பெண்ணின் வீட்டுக்கு அண்மையாகவுள்ள சிசிரிவி பதிவுகளின் ஆதாரங்களைக் கொண்டு 3 பேரையும் மோட்டார் சைக்கிளையும் பொலிஸார் அடையாளம் கண்டனர்.

அதனடிப்படையில் மூவர் கைது செய்யப்பட்டனர். அவர்களில் ஒருவர் ஏழாலையைச் சேர்ந்தவர். மற்றைய இருவரும் புன்னாலைக்கட்டுவன் அன்னமார் கோவிலடியைச் சேர்ந்தவர்கள். சந்தேக நபர்கள் விசாரணையின் பின்னர் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர்.



காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் - சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## தலைமைத்துவ வெற்றிடம்

**தமிழர் தரப்பில் தேசியம் பேசும் கட்சிகள் எல்லாம் தங்களின் தேசிய எதிர்பார்ப்பை எட்டுவதற்கான வழிவகையாக – மார்க்கமாக – எதனைக் காட்ட விழைகின்றார்கள் என்று பார்த்தால் அதில் பொதுமைப்பண்பு இருக்கின்றமையைக் காணமுடியும்.**

**அது – சர்வதேச ஆதரவைப் பக்கபலமாகப் பயன்படுத்துவது என்பதாகும்.**

**சர்வதேச ஆதரவு என்பது தேவைதான். அது பக்க பலமாக இருக்கலாமே தவிர, அதை மட்டுமே நம்பி தமிழர் தம் இலக்கை அடையலாம் என்பது எவ்வளவு தூரம் சாத்தியமானது?**

**சர்வதேசத்தின் ஆதரவையும், பலத்தையும், பின்புல உந்து சக்தியையும் நாம் பெறவேண்டும் என்றால், எமது உரிமைக்கான – இலக்குக்கான – எமது செயற்பாடுகள் அதிர்வுள்ளவையாகவும் உலகம் எங்களைத் திரும்பிப் பார்க்கச் செய்பவையாகவும் இருக்க வேண்டும்.**

**வெறுமனே நாடாளுமன்றக் கதிரைகளின் எண்ணிக்கையை – அட்சர கணித கணக்குகளை – மட்டும் வைத்துக் கொண்டு உலகைத் திரும்பிப் பார்க்க வைக்க முடியாது. அதுதான் எமது பட்டறிவு. அனுபவப் பாடம்.**

**ஆனாலும், அதை வைத்துக் கொண்டு, அதே சர்வதேச ஆதரவு என்ற பயனற்ற அரைத்த மாவைத்தான் எல்லாத் தமிழ்க் கட்சிகளும் மீளவும் அரைக்க முயலுகின்றன.**

**தங்களின் கருத்தியலையும் செயற்பாட்டையும் நோக்கி உலகத்தைத் திரும்பிப் பார்க்க வைக்கும் உருப்படியான திட்டமோ, தீர்க்க தரிசனமான செயல் கட்டமைப்போ எந்தத் தமிழ்க் கட்சியிடமும் இல்லை என்பதுதான் எமது துரதிஷ்டம்.**

**தலைவர் பிரபாகரனின் வழி நடத்தலில் முன்னெடுக்கப்பட்ட ஆயுதப் போராட்டம் உண்மையில் தமிழர் தேசத்தை நோக்கி – அவர்களின் வேணவாவை நோக்கி – அவர்களின் அபிலாஷைகளை நோக்கி – முழு உலகையுமே திரும்பிப் பார்க்க வைத்தன என்பது பழைய – ஆனால் உண்மையான – நிலைமை.**

**நாம் இப்பத்தியில் ஏற்கனவே பல தடவைகள் சுட்டிக் காட்டியபடி, விடுதலைப் புலிகளின் பீரங்கிகள், பல்குழல் ஏவுகணைகள், துப்பாக்கிகள் என்று சுடுகலன்கள் நெருப்பை உமிழ்ந்து வெடித்துக் கொண்டிருந்தபோது அந்தப் பேரதிர்வுக்கும், பெரும் சத்தத்துக்கும் மத்தியில் தமிழர்களின் கோரிக்கை சர்வதேசத்தின் காதில் வீழ்ந்தது.**

**ஆனால், இப்போதும் சர்வதேசமும் இந்தியாவும் எங்களின் பின்னால் நிற்கின்றன என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் திடமாக நம்புகின்றார். உறுதியாக அதனை அவர் கூறவும் செய்கின்றார்.**

**திருகோணமலையில் நடைபெற்ற பிரசாரக் கூட்டம் ஒன்றில் உரையாற்றிய சம்பந்தன், சர்வதேச சமூகமும் இந்தியப் பிரதமரும் எங்களுக்குப் பின்னால் நிற்கின்றார்கள் என்று கூறியிருக்கின்றார்.**

**அதேபோன்ற ஒரு கருத்தை கூட்டமைப்பின் யாழ் மாவட்ட வேட்பாளரும், கடந்த தடவை யாழ் மாவட்டத்தில் மிகக் கூடிய விருப்பு வாக்குகளைப் பெற்றவருமான சிவஞானம் சிறீதரன் தெரிவித்திருக்கின்றார்.**

***“இந்தியா எங்களை உன்னிப்பாகக் கவனிக்கின்றது. எங்கள் பிரசாரத்தில் உள்ள குறைபாடுகளைச் சுட்டிக் காட்டுகின்றது. நீங்கள் ஒரு வல்லமை மிக்க சக்தியாக இருக்க வேண்டும் என்றும், மலையகத் தமிழ் தலைமைகளுடன் இணைந்து பணியாற்ற வேண்டும் என்றும் அவர்கள் எங்களிடம் கூறுகின்றார்கள். அப்போதுதான் நாங்கள்(இந்தியா) இலங்கைக்கு அழுத்தம் கொடுக்க முடியும் என்று சொல்லுகிறார்கள்”*** **– என்று சிறீதரன் பிரசாரக் கூட்டம் ஒன்றில் உரையாற்றியிருக்கின்றார் என்று தகவல் வெளியாகியுள்ளது.**

**தமிழர்களின் முப்பது வருட கால நீட்சி கொண்ட ஆயுதப் போராட்டம் முறியடிக்கப்பட்டு, ஆயுதங்கள் மௌனித்துள்ள இந்தச் சமயத்தில் சர்வதேச ஆதரவு என்பதுதான் எமக்கிருக்கக் கூடிய ஒரே கொழுகொம்பு. அதில் மாற்றுக் கருத்து இல்லை.**

**கொழுகொம்பு மட்டும் இருந்து நாம் மேம்பட்டு விட முடியாது. கொழுகொம்பு ஒரு பற்றுக்கோடுதான். எம்மை மேம்படுத்துவதற்கான வளர்ச்சியும், விருத்தியும் எமக்குள் இருந்துதான் பிரவகிக்க வேண்டும். ஊற்றெடுக்க வேண்டும்.**

**வெறும் எம்.பி. ஆசனங்களின் எண்ணிக்கை, மாகாண சபையைக் கைப்பற்றுதல் போன்றவை மூலம் நாம் உயர்ந்து விட முடியாது. எமது இலக்கை – கொள்கையை – அபிலாஷையை நாம் எட்டிவிட முடியாது.**

**எங்கள் உரிமைக் கோரிக்கைக்கான போராட்டம் பெரும் மக்கள் சக்தி இயக்கமாக – அதிர வைக்கும் எழுச்சியாக – மாற வேண்டும்.**

**காந்தீய நெறியிலும் – அஹிம்சை வழியிலும் – அறநெறிப் பாதையிலும் – ஒரு உணர்வெழுச்சிப் போராட்டமாக – அதை முற்கொண்டு செல்ல வேண்டும்; செல்ல முடியும்.**

**தேர்தல்களுக்குத் தேர்தல் உணர்வெழுச்சிப் பேச்சுகளையும் கோஷங்களையும் முன்வைப்பதன் மூலம் அதனைச் செய்ய முடியாது.**

**உலகைத் திரும்பிப் பார்க்க வைக்கும் வகையிலான ஒரு கட்டமைப்பு மூலம் தமிழ் மக்களை வழிப்படுத்தக் கூடிய அரசியல் தலைமைத்துவமோ, கட்சியோ, நிறுவனமோ நம் மத்தியில் இல்லை என்பதுதான் உண்மை; நிஜம்; யதார்த்தம்.**

**அந்த வெற்றிடத்தை நிரப்பும் தரப்பு தமிழர் தலைமைகளிடையே தென்படுவதாக – தட்டுப்படுவதாகக் கூட – இல்லை என்பதுதான் நம் துரதிஷ்டம்.**

# நல்லூர் உற்சவ சமயத்தில் 300 பக்தர்களை அனுமதிக்கக் கோரி ஜனாதிபதிக்குக் கடிதம்

## யாழ். மாநகர பதில் முதல்வர் நேற்று அனுப்பினார்

(பிரபாகரன் டிலக்சன்)

யாழ்ப்பாணம்,ஜூலை 16

நல்லூர்க் கந்தசுவாமி ஆலய இவ்வருட மகோற்சவத்தின் போது போது குறைந்தது 300 பேரையேனும் ஆலய வளாகத்துக்கு அனுமதிக்க ஆவணை செய்யுமாறு கோரி யாழ். மாநகர சபை பதில் முதல்வர் துரைராசா ஈசன் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு கடிதம் ஒன்றை நேற்று எழுதியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது :-

நல்லூர்க் கந்தசாமி ஆலய வருடாந்த மகோற்சவம் ஜூலை24 ஆம் திகதி தொடங்கி ஒகஸ்ட் 20 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. இந்த முறை பக்தர்களின் பங்கேற்புடனோ அல்லது பங்கேற்பு இன்றியோ இந்து மத குருமார்கள் மற்றும் ஆலய ஊழியர்களின் உதவியுடன் வழமைபோன்று திருவிழா இடம்பெறும் என ஆலய நிர்வாகம் அறிவித்துள்ளது.

இந்நிலையில் யாழ்ப்பாண மாநகர சபையின் சுகாதார அதிகாரிகள் கோயிலுக்கு செல்லும் பக்தர்கள் கட்டாயம் பின்பற்ற வேண்டிய பல சுகாதார வழிகாட்டல்கள் குறித்தும் அறிவுறுத்தியுள்ளனர். கோயிலுக்குள் அதிக பக்தர்களை சீரற்ற முறையில் அனுமதிப்பது கொரோனா நோய்த் தொற்று அதிகரிப்பதற்கு வழிவகுக்கும், தொற்று நோய் நெருக்கடி காரணமாக சுகாதார அறிவுறுத்தல்களுக்கு அமைய திருவிழாக்களில் மட்டுப்படுத்தப்பட்ட தொகை பக்தர்களே ஆலயத்துக்குள் அனுமதிக்கப்படுவர் என்றும் சுகாதார அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அதற்கேற்ற வகையில் நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயம் மற்றும் மடு தேவாலய திருவிழாக் காலங்களில் குறைந்த பட்சம் 300 பேருக்கு அனுமதி வழங்கப்பட்டது. அதுபோன்று நல்லூர் கந்தசுவாமி ஆலயத்திற்கும் 300 பேருக்கும் மேற்படாத தொகையில் பக்தர்களை ஆலய வளாகத்துக்கு அனுமதிக்க உதவுமாறு ஆலயத்தின் பக்தர்கள் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன். உங்களது விரைவான பதிலுக்காகக் காத்திருக்கிறேன் எனவும் அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் யாழ் மாநகர சபை பதில் முதல்வர் துரைராசா ஈசனுடன் தொடர்பு கொண்டபோது –

இன்று (நேற்று) நல்லூர் ஆலய நிர்வாகத்துனருடன் சந்திப்பு ஒன்றை மேற்கொண்டிருந்தேன். அந்த சந்திப்பில் யாழ் மாநகர சபையின் சுகாதார அதிகாரிகள், யாழ் மாவட்ட கட்டளைத் தளபதி, பொதுச் சுகாதார அதிகாரிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இதில் பல விடையங்கள் கலந்துரையாடப்பட்டன. ஆலயத்துக்குள் மக்களைப் பகுதி பகுதியாக விடுவது பற்றியும் கலந்துரையாடினோம். எனினும் உறுதியான முடிவுகள் எடுக்கப்படவில்லை. இவ் விடயம் தொடர்பாக முதலில் யாழ் மாநகர சபையின் ஆளுங்கட்சி உறுப்பினர்களோடு கலந்துரையாடி பின்னர் அனைத்து கட்சி உறுப்பினார்களோடும் கலந்தாலோசிப்பதென முடிவெடுத்துள்ளோம் – என்றார்.

# நல்லூர் உற்சவ காலத்தில் மக்களுக்கான சுகாதார நடைமுறைகள் பற்றிய விவரங்கள்

## மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி வெளியிட்டுள்ளார்

யாழ்ப்பாணம், ஜூலை 16

கொவிட் - 19 தொற்று அபாயமுள்ள தற்போதைய சூழ்நிலையில் இடம்பெறவுள்ள நல்லூர் உற்சவ காலத்தில் பொது மக்கள் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள் குறித்து சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினரின் அறிவுறுத்தல்களை யாழ் மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி வெளியிட்டுள்ளார்.

அதன் விவரம் வருமாறு:-

நல்லூர் வருடாந்த உற்சவம் 2020 ஜூலை மாதம் 24 ஆம் திகதி ஆரம்பமாகிறது. நாட்டில் அண்மைக்காலத்தில் தீவிரம் பெற்றுள்ள கொவிட் - 19 தொற்று நோய்த் தாக்கத்தில் இருந்து எமது மக்களைப் பாதுகாக்கும் கடமை ஒவ்வொரு முருக பக்தர்களுக்கும் உண்டு. அதனால் ஆலய நிர்வாகத்தினரின் வழமையான செயற்பாடுகளுக்கு இடையூறு ஏற்படுத்தாது இருக்கும் வகையில் இவ்வருட திருவிழாவில் பக்தர்கள் இயன்ற வரை நேரடியாக பங்கு பற்றுவதை தவிர்த்து, வீட்டில் இருந்தவாறே முருகப்பெருமானை வழிபடுவது பொருத்தமாக இருக்கும் என்பதுடன் திருவிழாவில் பின்வரும் சுகாதார அறிவுறுத்தல்களையும் பின்பற்றுமாறு பக்தர்களை வேண்டிநிற்கின்றோம்.

நல்லூர் ஆலய வளாகத்தினுள் நுழையும் பக்தர்களின் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்படும். இதை நடைமுறைப்படுத்துவதற்கு பாதுகாப்பு பிரிவினருக்கும் எமக்கும் பக்தர்களது பூரண ஒத்துழைப்பை எதிர்பார்த்து நிற் கின்றோம்.

* அனைத்து பக்தர்களும் முகக்கவசம் அணிந் திருத்தல் கட்டாயமானதாகும்.

* பக்தர்கள் அனைவரும் சமூக இடைவெளியினை பேணுதல் அவசியமாகும்.

*பக்தர்கள் கோயில் சூழலில் மிகக் குறைந்த நேரத்தை மாத்திரம் செலவிட வேண்டும் என் பதுடன் தேவையற்ற விதத்தில் உலா வருவதை தவிர்த்துக் கொள்ளல் சிறந்தது.

* வயோதிபர்கள், சுகவீனமுற்றோர் ஆலயத்திற்கு வருகை தருவதை தவிர்த்துக் கொள்ளல் சிறந்தது.

* குழுக்களாக ஒன்றுகூடி ஆராதனை செய்தல் (பஜனை) தடை செய்யப்பட்டுள்ளது.

*சுயதனிமைப்படுத்தல், கட்டாய தனிமைப் படுத்தலை பூர்த்தி செய்தோர் (உதாரணமாக வெளிநாடுகளில் இருந்து வருகை தந்தோர்) அதற்குரிய சான்றிதழை ஆலய சூழலில் நடமா டும் சந்தர்ப்பத்தில் தம்முடன் - வைத்திருத்தல் வேண்டும்.

* மண்டபப்படிவைத்தல், பிரசாதங்கள் வழங்கல், தாகசாந்தி வழங்கல், தானங்கள் வழங்கல், அன்னதானம் வழங்கல், ஆலயச் சூழலில் முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளது.

* அடியார்கள் அங்கப்பிரதட்சணம் செய்தல், காவடி எடுத்தல், தூக்குகாவடி எடுத்தல், கற்பூர சட்டி எடுத்தல் மற்றும் அடி அழித்தல் போன்ற நோய்க்கட்டுப்பாட்டை கடைப்பிடிக்க முடியாத வழிபாட்டு முறைகள் அனைத்தும் தடை செய்யப்பட்டுள்ளன.

* ஆலய வீதிகளில் சூழவுள்ள மண்டபங்களில் கூட்டுப்பிரார்த்தனை, பிரசங்கங்கள், தெய்வீக சொற்பொழிவுகள், தெய்வீக இசையரங்குகள் மற்றும் கலை நிகழ்வுகள் அனைத்தும் தடை செய்யப்பட்டுள்ளன.

* ஆலய வீதிகளில் பொழுதுபோக்கிற்கான அனைத்து நிகழ்வுகளும் தடைசெய்யப்பட்டுள்ளன.

*மேற்குறித்த அனைத்து சந்தர்ப்பங்களிலும் மேலதிக சுகாதார நடைமுறைத் தளர் வுகள் ஏற்படும் வரை அனைத்து விதமான சுகாதாரப் பாதுகாப்பு நடைமுறைகளையும் பின்பற்றுவது கட்டாயஷமான ஒன்றாகும்.

சுகாதார அமைச்சின் எதிர்கால அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப மேலதிக அறிவுறத்தல்கள் எம்மால் வழங்கப்படும். – எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தேர்தலை 2 வருடங்கள் ஒத்திப்போட சஜித் சதி!

## மஹிந்த தரப்பு குற்றச்சாட்டு



கொழும்பு, ஜூலை 15

கொரோனா வைரஸின் தாக்கம் இரண்டு வருடங்களுக்கு இருக்கும் என்று எச்சரிக்கப்பட்டுள்ள நிலையில், பொதுத் தேர்தலை இரண்டு வருடங்களுக்கு ஒத்திவைக்கவா சஜித் பிரேமதாஸ முற்படுகிறார் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில கேள்வி எழுப்பியுள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

சஜித் பிரேமதாஸ மீண்டும், பொதுத் தேர்தலை பிற்போடுமாறு அரசிடமும் தேர்தல்கள் ஆணைக்குழுவிடமும் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஆனால், தேர்தலை பிற்போட அரசுக்கோ ஜனாதிபதிக்கோ எந்தவொரு அதிகாரமும் கிடையாது என்பதை நாம் அவரிடம் கூற விரும்புகிறோம்.

இந்த அதிகாரம் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு மட்டும்தான் இருக்கிறது. ஆணைக்குழுவும் சஜித் பிரேமதாஸவின் கோரிக்கைக்கு இணங்க, இரண்டு தடவைகள் பொதுத் தேர்தலை ஒத்தி வைத்தது.

அந்தவகையில், ஏப்ரலில் 25 நடக்க வேண்டிய தேர்தலை ஜூன் 20 ஆம் திகதியும், ஜூன் 20 ஆம் திகதி நடக்கவிருந்த தேர்தலை ஒகஸ்ட் 5 ஆம் திகதியும் ஆணைக்குழு பிற்போட்டது.

ஏப்ரல் 30 ஆம் திகதி முதல், ஜூலை 9 ஆம் திகதிவரையான 70 நாள்களில், இலங்கையில் சமூக ரீதியாக கொரோனா பரவவில்லை.

இந்த நிலையில், ஜூன் 20 ஆம் திகதியே பொதுத்தேர்தலை நடத்தியிருந்தால், இதனைவிட அச்சமில்லாத சூழலில் மக்கள் வாக்களிக்க வருகை தந்திருப்பார்கள்.

எதிர்காலத்தில் கொரோனா பரவல் அதிகரிக்குமா, குறைவடையுமா என்பதை எவராலும் கூறமுடியாத நிலைமையே தற்போது காணப்படுகிறது.

சஜித் பிரேமதாஸவுக்கு இது தொடர்பாக வாக்குறுதி வழங்கவும் முடியாது. உலக சுகாதார ஸ்தாபனம் கூறுவதற்கு இணங்க இன்னும் 2 வருடங்களுக்கேனும் கொரோனாவுடன் வாழவேண்டிய நிலைமை இருக்கும் என்று கூறியுள்ளது.

அப்படியானால், இரண்டு வருடங்களுக்கு பொதுத்தேர்தலை பிற்போடவா, சஜித் பிரேமதாஸ முயற்சிக்கிறார் என்று கேட்க விரும்புகிறோம்.

எனவே, பொதுத்தேர்தலை உரிய திகதியில் நடத்த வேண்டும் என நாம் கேட்டுக்கொள்கிறோம் - என்றார்.

# லைசன்ஸ் தயாரிப்பு இராணுவத்தினரிடம்?



கொழும்பு, ஜூலை 15

சாரதி அனுமதிப்பத்திரம் தயாரிப்பதை இலங்கை இராணுவத்திடம் ஒப்படைப்பதற்கான சாதகமான காரணிகளை ஆராய்ந்து பார்ப்பதற்கு போக்குவரத்துத்துறை அமைச்சு நடவடிக்கை எடுத்து வருகின்றது.

பாதுகாப்புச் செயலாளர் ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் கமால் குணரத்ன மற்றும் இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா ஆகியோருடன் நடந்த கலந்துரையாடலின்போது, இந்த விடயம் தொடர்பாக ஆராயப்பட்டதாக போக்குவரத்துத்துறை அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

அதற்கமைய எதிர்வரும் வருடம் முதல் இந்த நடவடிக்கையை இராணுவத்தினரிடம் ஒப்படைப்பது குறித்து அரசு ஆராய்ந்து வருவதாக கூறப்படுகிறது.

இதனையடுத்து, மிகக்குறைந்த செலவில் வாகனச்சாரதி அனுமதிப்பத்திரத்தை இராணுவத்தினால் தயாரிக்க முடியும் என பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கமால் குணரட்ண தெரிவித்துள்ளார் என்றும், இது தொடர்பாக இராணுவம் மற்றும் பாதுகாப்புச் செயலாளருடன் பேச்சுக்களை நடத்துவதற்காக போக்குவரத்து அமைச்சர் குழுவொன்றை நியமித்துள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

# ஊரடங்கு தேவையற்றது

கொழும்பு, ஜூலை 15

நாட்டில் ஊரடங்கு உத்தரவை நடைமுறைப்படுத்தவேண்டிய அவசியமில்லை என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் அனில் ஜாசிங்க தெரிவித்தார்.

தனியார் தொலைக்காட்சிக்கு வழங்கிய செவ்வியில் அவர் இவ்வாறு கூறியுள்ளார். கொரோனா வைரஸ் தொற்று நாடு முழுவதையும் உள்ளடக்கியதாக இதுவரை எந்த அறிக்கையும் இல்லை என்று அவர் சுட்டிக்காட்டினார். பாதிக்கப்பட்ட சில பகுதிகளுக்கு ஏற்கனவே பயணக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன என்றும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் குறிப்பிட்டார்.

# கொரோனா 2ஆம் அலை தாக்க தொடங்கிவிட்டது!

## ஆனால் கோட்டா அரசு அதனை மறைக்கிறது என்கிறார் ரணில்



கொழும்பு, ஜூலை 15

நாட்டில் கொரோனாவின் இரண்டாம் அலை ஆரம்பமாகிவிட்டதென ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸினால் ஏற்பட்டுள்ள உண்மையான தாக்கம் தொடர்பான

தகவல்களை அரசு மறைப்பதாகச் சந்தேகம் எழுந்துள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

இவ்விடயம் தொடர்பாக ரணில் விக்கிரமசிங்க, தனது ருவிட்டர் பக்கத்தில் காணொலியொன்றைப் பதிவேற்றியுள்ளார்.

அந்த ருவிட்டர் காணொலி பதிவில் மேலும் அவர் தெரிவித்துள்ளதாவது:

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானவர்களை அடையாளங்காண்பதற்காக நடத்தப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனைகள் நடவடிக்கையில் இருந்து ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் விலகியுள்ளது.

இவ்வாறு அவர்கள் விலகியிருப்பதன் ஊடாக சுகாதார அமைச்சு தொற்றாளர்களின் எண்ணிக்கையில் மாற்றத்தை ஏற்படுத்துகின்றதா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

எனவே நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றினால் ஏற்பட்டுள்ள தாக்கம் தொடர்பாக உண்மையான தகவலை அரசு வெளியிட வேண்டும்.

கொரோனா வைரஸ் தொற்றின் இரண்டாவது அலையே தற்போது ஆரம்பமாகியிருக்கின்றது.

கொரோனா வைரஸை கட்டுப்படுத்துவதற்கு என்னால் முன்மொழியப்பட்ட விடயங்களை அரசுடன் டீல் செய்வதாகக் கூறினார். இப்போது அனைவருக்கும் நான் கூறிய விடயங்கள் குறித்து விளங்கியிருக்கும்.

வைரஸ் தொற்றைக் கண்டறிவதற்கான நாளொன்றுக்கு 5000 பி.சி.ஆர் பரிசோதனைகளை மேற்கொள்ளுமாறு கூறினோம். அரசு அதனை செய்யவில்லை.

நாம் கூறியபோதே நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தால், இக்கட்டான சூழ்நிலைக்கு முகம் கொடுத்திருக்க வேண்டிய தேவை ஏற்பட்டிருக்காது - என்றார்.

# 2ஆம் அலை குறித்து தெரியாது என்கிறார் இராணுவத் தளபதி

கொழும்பு, ஜூலை 15

இலங்கையில் கொரோனா வைரஸின் இரண்டாவது கட்டத் தாக்கம் உருவெடுத்துள்ளதா என்பதைத் தற்போது கூறமுடியாது என்று இலங்கையின் இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

எனினும் பொதுமக்கள் மிகுந்த அவதானத்துடன் எதிர்வரும் நாள்களில் செயற்பட வேண்டும் என்ற அறிவுறுத்தலையும் அவர் வழங்கியுள்ளார்.

கண்டி - ஸ்ரீதலதா மாளிகைக்கு இன்று சென்ற இராணுவத் தளபதியிடம் ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பிய போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

ஏப்ரல் 20ஆம் திகதியின் பின் இலங்கையில் சமூகத்தினிடையே கொரோனா வைரஸ் நோயாளர்கள் இனங்காணப் படாமையாலும், அதன் பின்னர் கடற்படையினரில் பலர் இந்தத் தொற்றுக்கு இலக்காகியமையினாலும் மக்களிடையே இப்படியான அச்சநிலை உருவாகியிருக்கின்றது.

எனினும் முன்னர் அறிவித்தபடி ஜனாதிபதியும், பிரதமரும் வழங்கிய ஆலோசனையின் பிரகாரம் முப்படையினர், சுகாதாரத்துறை, பொலிஸார் இணைந்து கொவிட் - 19 வைரஸைக் கட்டுப்படுத்த முடிந்துள்ளது.

விசேடமாக கந்தக்காடு புனர்வாழ்வு முகாமுக்குள் அனைவரிடமும் அதேபோல அவர்களுடன் தொடர்புபட்ட அனைவரிடமும் பி.சி.ஆர். பரிசோதனை நடந்து முடிந்துள்ளது. முகாமிலுள்ள பணிக்குழாமைச் சேர்ந்த குடும்ப அங்கத்தவர்களும் தற்சமயம் தனிமைப்படுத்தி வைக்கப்பட்டுள்ளனர்.

பி.சி.ஆர் பரிசோதனையின் முடிவுகள் நேற்று முதல் வெளியிட ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதனையடுத்து சமூகத்தில் சிறு அச்சம் ஏற்படத் தொடங்கியுள்ளது. விசேடமாக சில நகரங்களில் நோயாளர்கள் இனங்காணப்பட்டனர் என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு நோயாளர்கள் இனங்காணப் பட்டால் அந்தப் பகுதியைச் சேர்ந்த சுகாதார அதிகாரிகளுக்கு அதுபற்றி தகவல் அளிப்போம். தொடர்ந்து நோயாளர்களுடன் நெருங்கியவர்களைப் பரிசோதனை செய்வது வழக்கம். அதனால் அப்பிரதேசங்கள் முடக்கப்படலாம் என்ற அச்சமும் மக்களிடையே ஏற்படுகிறது. ஆனால் அவ்வாறு செய்யப்படாது.

அரச தகவல் திணைக்களம் உண்மையான தகவல்களை வெளியிடும். அதனை விடுத்து பல தரப்பிலிருந்தும் வெளியாகும் தகவல்களை நம்பவேண்டாம். இதுவரை 532 பேர் கொரோனா வைரஸினால் பாதிக்கப்பட்ட நிலையில் கந்தக்காடு முகாமில் இனங்காணப்பட்டுள்ளனர். அவர்கள் அனைவரும் அந்த முகாமில் புனர்வாழ்வு பெறுகின்றவர்கள்.

64 பேர் ஆலோசனையாளர்களும் பணிக்குழுவைச் சேர்ந்தவர்களும் உள்ளனர். மேலும் 24 பேர் அவர்களது குடும்ப அங்கத்தவர்களும், பிரதேசத்தைச் சேர்ந்தவர்களும் தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளனர். கொரேனா வைரஸின் இரண்டாவது கட்டம் உருவெடுத்துள்ளதா என்பது சொல்லமுடியாது. எதிர்வரும் சில தினங்கள் மிகமுக்கியமாகும். மக்கள் மிகவும் கவனமாக சுகாதார நெறிமுறைகளைக் கடைபிடிக்கவேண்டும் - என்றார்.

# இந்தியா - சீனா இடையே பதற்றம் எல்லையில் 15 மணி நேரம் பேச்சு!

இந்தியா - சீனா எல்ஷ்லைப் பதற்றத்தின் தொடர்ச்சியாக லடாக்கை ஒட்டியுள்ள பகுதிகளில் இருந்து இந்திய மற்றும் சீன படைகளை விலகிக் கொள்வது தொடர்பாக இராணுவ உயரதிகாரிகள் மட்டத்திலான பேச்சு நடந்தது.

இந்தப் பேச்சு கிட்டத்தட்ட 15 மணி நேரம் வஷ்ரை நீடித்தது. கிழக்கு லடாக் பகுதியில் உள்ள சூல் எல்லைச் சாவடியில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை காலை 11:30 மணி அளவில் தொடங்கிய இந்தப் பேச்சு மறுநாள் புதன் கிழமை அதிகாலை 2 மணியளவில் முடிவடைந்தது.



அதாவது 14.5 மணித்தியாலங்கள் நீடித்த பேச்சாக இது நடந்துள்ளது. ஜூன் மாதம் 15ஆம் திகதி கல்வான் பள்ளத்தாக்குப் பகுதியில் இந்தியா - சீனாச் சிப்பாய்களுக்கிடையில் கைகலப்பு நடந்தது. அந்த மோதலுக்குப் பின்னர் எல்லைப் பகுதியில் இருந்து படைகளை விலக்கிக் கொள்வது தொடர்பில் பேச்சுகள் நடந்து வருகின்றன.

இது படைகளை விலக்கிக்கொள்வது தொடர்பான இரண்டாம் கட்டப் பேச்சு ஆகும். இதில் எடுக்கப்பட்ட முடிவுகள் குறித்து அறிவிக்கப்படவில்லை.

ஜூலை மாதம் 5ஆம் திகதி இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல் மற்றும் சீனாவின் வெளியுறவு அமைச்சர் வாங் யி ஆகியோரிடையே நடை பெற்ற தொலைபேசி உரையாடலில் எல்லைப் பகுதியில் இருந்து இரு நாடுகளும் தங்களின் படைகளை விரைவாக விலக்கிக் கொள்வதற் குச் சம்மதிக்கப்பட்ட நிலையில் இந்த இரண்டாவது கட்டப் பேச்சுகள் நடந்துள்ளன.

முதல் கட்டப் பேச்சுகளின்படி படைகள் விலக்கப்பட்ட போது பாங்கோங் த்சோ ஏரி அருகே அமைந்துள்ள ஃபிங்கர் - 4, ஃபிங்கர் - 5 ஆகிய பகுதிகளிலிருந்து சீனப் படைகள் விலக்கின. அதற்கு முன்னதாகவும் கல்வான் பள்ளத்தாக்கு, ஹாட் ஸ்பிரிங்ஸ், பேட்ரோலிங் பாய்ண்ட் - 14 ஆகிய பகுதிகளில் சீனப் படைகள் சுமார் 2 கிலோமீற்றர் தூரம் பின்வாங்கின.

இதன் பின்னர் இந்தியப் படைகளும் எல்லையிலிருந்து பின்வாங்கின. சீனாவுடனான பேச்சில் ஏற்றுக் கொள்ளப்பட்டது போல இந்தியப் படைகள் எல்லையிலிருந்து விலகிக் கொண்டன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கடலில் இறங்கி உயிரைத் துறப்போம் மீனவர்கள் சபதம் - பொலிஸார் குவிப்பு

தங்களின் வாழ்வாதாரம் காக்கப்படும் வகையில் உரிய நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால் எதிர்வரும் 17ஆம் திகதியன்று குடும்பத்தினருடன் கடலில் இறங்கி உயிரை மாய்த்துக் கொள்ளப்போவதாகச் சுருக்குமடி வலையைப் பயன்படுத்தித் தொழிலில் ஈடுபடுகின்ற நாகை மாவட்ட மீனவர்கள் அறிவித்துள்ளனர்.

இதையடுத்து ஆயிரத்து 500க்கும் மேற்பட்ட பொலிஸார் நாகை மாவட்டம் சீர்காழிப் பகுதியில் குவிக்கப்பட்டுள்ளனர். நாகை மாவட்டத்தில் சுருக்குமடி வலை தொடர்பாக மீனவர்களுக்குள் தொடர்ந்து பிரச்சினை இருந்து வருகிறது. சுருக்குமடி வலைகளைக் கொண்டு மீன் பிடிப்பதால் கடலில் மீன்வளம் முற்றிலுமாக அழிந்து போய் விடுவதாகக் குற்றம் சாட்டும் இதர வலை மீனவர்கள், அந்தவலைக்குத்தடைவிதிக்கவேண்டும் என்று கோரி வருகின்றனர்.

தமிழக அரசும், உயர் நீதிமன்றமும் சுருக்குமடி வலைக்குத் தடை விதித்துள்ள போதிலும் இருபதுக்கும் மேற்பட்ட மீனவ கிராமங்களில் சுருக்குமடி வலையை இன்னமும் பயன்படுத்தி வருகின்றனர். இதனால் தங்களுக்குப் பெரும் பாதிப்பு ஏற்படுவதாகக் கூறும் சாதாரண வலை மூலம் மீன்பிடித் தொழில் செய்யும் மீனவர்கள், சுருக்குமடி வலையைப் பயன்படுத்தக் கூடாது என எதிர்ப்புக் காட்டுவதால் அவர்களுக்குள் அவ்வப்போது மோதல் ஏற்படுகிறது.

கடந்த சில நாள்களுக்கு முன்னர் திருமுல்லைவாசல் மீனவர்களுக்கும், கீழமூவர்க்கரை மீனவர்களுக்கும் இடையே இது தொடர்பாக நடுக்கடலில் மோதல் ஏற்பட்டது. இதனால் சட்டம் - ஒழுங்கு பிரச்சினை ஏற்படுவதைக் கவனித்த மீன்வளத் துறையினர் விழித்துக் கொண்டு, சுருக்குமடி வலையைப் பயன்படுத்திப்பிடிக்கப்படும் மீன்களை வாகனங்களுடன் பறிமுதல் செய்ய ஆரம்பித்தனர்.

இதனால் ஆத்திரமடைந்த சுருக்குமடி வலை மீனவர்கள் எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் மீனவ கிராமங்களில் பதற்றம் ஏற்பட்டது. மாவட்ட ஆட்சியர் பிரவீன் கே.நாயர் இரு தரப்பினரையும் சந்தித்துப் பேசி விரைவில் நல்ல முடிவு ஏற்படும் என்று சமாதானப்படுத்தினார்.

அதைத் தொடர்ந்து போராட்டங்கள் ஓய்ந்துள்ளன. இந்த நிலையில், சீர்காழி அருகேயுள்ள திருமுல்லைவாசல் மீனவ கிராமத்தில் நேற்று சுருக்குமடி வலை மீனவர்களின் ஆலோசனைக் கூட்டம் நடந்தது. அதில், நாகை மற்றும் காரைக்கால் மாவட்டங்களைச் சேர்ந்த 21 மீனவ கிராமங்களைச் சேர்ந்த மீனவர்கள் கலந்து கொண்டனர்.

அரசால் சுருக்குமடி வலைக்கு எதிரான முடிவு எடுக்கப்பட்டால் மீனவர்கள் அந்தந்த மீனவ கிராமங்களில் உள்ள கடலில் குடும்பத்தோடு இறங்கி உயிரை மாய்த்துக் கொள்ளும் போராட்டம் நடத்துவது எனத் தீர்மானம் நிறைவேற்றினர். இதனால் மீனவ கிராமங்களில் மீண்டும் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

# மரியாதையை இழக்கிறது இந்தியா!

## ராகுல் காந்தி விமர்சனம்



அனைத்து இடங்களிலும் இந்தியா மரியாதையையும் அதிகாரத்தையும் இழந்து வருகிறது.

இதனால் இந்தியா அரசு என்ன செய்வதென்று தெரியாமல் இருக்கிறது என்று விமர்சித்துள்ளார் ராகுல் காந்தி. ஆப்கானிஸ்தானுக்குப் பொருள்களை வீதி மார்க்கமாகக் கொண்டு செல்லவேண்டுமாயின் பாகிஸ்தான் வழியாகவே இந்தியா செல்ல வேண்டும். அதற்குப் பாகிஸ்தான் அனுமதி மறுத்ததால், கடல் வழியாக ஈரான் சென்று அங்கிருந்து ஆப்கனுக்கு ரயில் மூலம் பொருள்களை அனுப்ப இந்தியா திட்டமிட்டது. இதற்காக ஈரானின் சாபஹர் துறைமுகத்தை முழுமையாகச் சீரமைக்கும் பணியைச் செய்ய ஈரானிடம் கடந்த 4 ஆண்டுகளுக்கு முன் இந்தியா ஒப்பந்தம் செய்தது.

சாபஹார் துறைமுகத்திலிருந்து ஆப்கன் எல்லை சஹேதான் வரை ரயில் பாதை அமைக்கும் ஒப்பந்தத்தை இந்தியாவுடன் ஈரான் மேற்கொண்டது. ஆனால், ஈரானுடன் இந்தியா கச்சா எண்ணெய் இறக்குமதியை இந்திய ரூபாய் மதிப்பில் செய்து வந்தபோது, அமெரிக்கா விதித்த தடையால் ஈரானுடன் செய்து வந்த கச்சா எண்ணெய் வர்த்தகத்தை இந்தியா நிறுத்தியது.

இந்தச் சூழலில் திட்டத்தைத் தொடங்க இந்தியத் தரப்பிலிருந்து நிதி அளிப்பதில் தாமதமாகி வருவதால் தாங்களே இந்தத் திட்டத்தை நிறைவேற்றிக் கொள்கிறோம் என்று ஈரான் இந்தியாவை இத்திட்டத்திலிருந்து நீக்கியுள்ளது. இந்தத் திட்டத்திலிருந்து இந்தியா நீக்கப்பட்டுள்ள செய்தியைத் தனது கீச்சகப் பக்கத்தில் பதிவிட்ட ராகுல் காந்தி, இந்திய அரசை மேற்குறிப்பிட்டவாறு கடுமையாக விமர்சித்துள்ளார்.

# ஜெயலலிதாவின் வீட்டை நினைவகமாக மாற்றலாம்!




மறைந்த தமிழக முதல்வர் ஜெயலலிதாவின் வீட்டை நினைவில்லமாக மாற்றுவதற்குத் தடை ஏதும் கிடையாது என்று சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தமிழக முதல்வராக இருந்த ஜெயலலிதா 2016 ஆம் ஆண்டில் மறைந்தபோது, அவரது வீட்டை நினைவில்லமாக மாற்றுவதற்குத் தமிழக அரசு முடிவெடுத்தது. இது தொடர்பான நடவடிக்கைகளை முன்னெடுத்தது.

ஆனால், ஜெயலலிதாவின் வீடு அமைந்திருந்த போயஸ் தோட்டம் பகுதியில் வசித்தவர்கள் கஸ்தூரி நிறுவன உரிமையாளர்கள் சங்கத்தின் சார்பில் அதை எதிர்த்துச் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு ஒன்றைத் தொடர்ந்தனர். கொரோனா பரவல் காலகட்டத்தில் இதற்கான அறிவிப்பு வெளியிடப்பட்டிருக்கின்றது என்றும், ஜெயலலிதாவின் வீட்டைக் கையகப்படுத்துகின்ற நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன என்றும் மாவட்ட ஆட்சியரிடம் இது தொடர்பாக மனு அளித்தும் நடவடிக்கை ஏதும் இல்லாததால், நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருப்பதாக மனுதாரர் சார்பில் தெரிவிக்கப்பட்டது.

குறுகிய வீதிகளைக் கொண்ட இந்தப் பகுதியில் ஐநூறுக்கும் மேற்பட்ட வீடுகள் இருப்பதால் தமது கருத்தைக் கேட்கவில்லையென்றும் கருத்துக் கேட்பு சரியாக நடக்கவில்லையென்றும் மனுதாரர் தரப்பில் கூறப்பட்டது.

ஆனால், இது தொடர்பான முயற்சிகள் 2017ஆம் ஆண்டில் இருந்தே நடந்துவருவதாகவும் கஸ்தூரி நிறுவன உரிமையாளர்கள் சங்கமே 2019ஆம் ஆண்டில்தான் ஆரம்பிக்கப்பட்டது என்றும் தமிழ் நாட்டில் ஏற்கனவே காமராஜர், வ.உ.சி. உள்ளிட்ட பலருக்கு நினைவில்லங்கள் இருப்பதாகவும் அரச தரப்பில் தெரிவிக்கப்பட்டது. எல்லா அறிவிப்புகளும் முறைப்படி செய்யப்பட்டதாகவும் கூறப்பட்டது. இந்த வழக்கில் இன்று தீர்ப்பளித்த நீதிபதி ஆனந்த் வெங்கடேசன், ஜெயலலிதாவின் வீட்டை நினைவில்லமாக்குவதற்குத் தடை ஏதும் இல்லையென்றும் உத்தரவிட்டு வழக்கை முடித்தார்.

# கொரோனாவால் 5 லட்சம் பேர் சாவு!

கொரோனா வைரசின் கோரப்பிடியில் சிக்கி உலகம் முழுவதும் 5 லட்சத்துக்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர்.

சீனாவின் வுஹான் நகரில் கடந்த ஆண்டின் இறுதியில் உருவான கொரோனா, தற்போது உலகின் 200க்கும் மேற்பட்ட நாடுகளுக்குப் பரவி 1.33 கோடி பேரை பாதிப்புக்கு உள்ளாக்கி இருக்கிறது. இந்த வைரசின் கோரப்பிடியில் சிக்கி உலகம் முழுவதும் 5 லட்சத்துக்கும் அதிகமானோர் தங்கள் இன்னுயிரை இழந்துள்ளனர்.

மேலும் கொரோனாவுக்குச் சிகிச்சை பெறுபவர்களில் 59 ஆயிரம் பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது. இந்த வைரஸ் தாக்குதலில் சிக்கி சிகிச்சையின் மூலம் மீண்டவர்கள் எண்ணிக்கை 77 லட்சத்தைக் கடந்துள்ளது. கொரோனாவால் அதிகம் பாதிக்கப்பட்ட நாடுகளின் பட்டியலில் அமெரிக்கா தொடர்ந்து முதல் இடத்தில் நீடிக்கிறது. அங்கு சுமார் 35 லட்சம் பேருக்கு நோய்த்தொற்று உறுதியாகி இருக்கிறது. இதற்கு அடுத்தபடியாக 2ஆவது இடத்தில் பிரேசிலும், 3ஆவது இடத்தில் இந்தியாவும் உள்ளன.



# புபோனிக் பிளேக் நோயால் 15 வயதுச் சிறுவன் சாவு!



மங்கோலியாவில் 15 வயதுடைய சிறுவன் ஒருவர் புபோனிக் பிளேக் நோயால் பாதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளான்.

புபோனிக் பிளேக் என்பது ஒருவகைப் பக்டீரியாவால் ஏற்படுகின்ற நோய். இது மர்மோட் போன்ற காட்டில் வாழும் கொறித்து திண்ணும் உயிரினங்களால் பரவுகின்றது என்று சொல்லப்படுகிறது. இதற்கு உரிய சிகிச்சை அளிக்காவிட்டால், பாதிக்கப்பட்ட நபர் 24 மணி நேரத்தில் உயிரிழக்கக்கூடும் என உலக சுகாதார அமைப்பின் அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

இந்த நிலையில், கடந்த முதலாம் திகதியன்று மேற்கு மங்கோலியாவின் கோவ்ட் மாகாணத்தில் 2 பேருக்கு புபோனிக் பிளேக் நோய் இருப்பது உறுதிசெய்யப்பட்டது. அவர்கள் 2 பேரும் மர்மோட் இறைச்சியை உண்டனர் என்று கண்டறியப்பட்டது. இதனால் மர்மோட் இறைச்சியை மக்கள் சாப்பிட வேண்டாம் என எச்சரிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் மங்கோலியாவின் மேற்கு பகுதியில் உள்ள கோவி அல்டாய் மாகாணத்தில் 15 வயதான சிறுவன் ஒருவன் கடந்த 3 நாள்களுக்கு முன்பு புபோனிக் பிளேக் நோயால் பாதிக்கப்பட்டான்.

அந்தச் சிறுவன் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் உயிரிழந்தான். இது மங்கோலியாவில் புபோனிக் பிளேக் நோய்க்கு ஏற்பட்டுள்ள முதல் உயிரிழப்பாகும். இதனால் மங்கோலிய மக்கள் கடும் அச்சத்தில் உள்ளனர். சீனாவில் இருந்து பரவத் தொடங்கிய கொரோனா வைரசால் உலக நாடுகள் கடும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ள நிலையில் சீனாவின் அயல் நாடான மங்கோலியாவில் புபோனிக் பிளேக் நோய் கண்டறியப்பட்டுள்ளது.

# கொரோனாத் தடுப்பு மருந்தை அடுத்த மாதம் பயன்படுத்தலாம்

## ரஷ்யா அறிவிப்பு

கொரோனாவுக்கான தடுப்பு மருந்தை ரஷ்யா கண்டுபிடித்துள்ள நிலையில், அடுத்த மாதத்தில் அந்தத் தடுப்பு மருந்து பயன்பாட்டுக்கு வரும் என்று அந்த நாட்டு மருத்துவ ஆய்வாளர்கள் தெரிவித்தனர்.

கொரோனா தடுப்பு மருந்துக்கான அனைத்துக் கட்டப் பரிசோதனைகளையும் வெற்றிகரமாக முடித்துள்ளதாக ரஷ்யா அண்மையில் அறிவித்தது. பரிசோதனை முடிவில் எதிர்பார்த்த பலன் கிடைத்துள்ளதால் எதிர்வரும் ஒகஸ்ட் மாதத்தின் நடுப்பகுதியில் தமது தடுப்பு மருந்து பயன்பாட்டுக்குக் வரவுள்ளது என்று ரஷ்யா தெரிவித்தது. ரஷ்ய பாதுகாப்பு அமைச்சகத்தின் கீழ் உள்ள கமாலேயே தொற்றுநோய் மற்றும் நுண்ணுயிரியல் நிறுவனம் இந்தத் தடுப்பு மருந்தைக் கண்டுபிடித்துள்ளது.

தடுப்பு மருந்து தொடர்பான பரிசோதனைகளை செச்சினோவ் பர்ஸ்ட் மொஸ்கோ மெடிக்கல் பல்கலைக் கழகம் மேற்கொண்டுள்ளது. இந்தத் தடுப்பு மருந்துக்கான பரிசோதனைகள் குறுகிய காலகட்டத்தில் முடிக்கப்பட்டாலும் அனைத்துக் கட்டச் சோதனைகளுக்கும் முழுமையாக உட்படுத்தப்பட்டிருக்கின்றது என்று ரஷ்யாவின் பாதுகாப்புத் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. இதுகுறித்து கமாலேயே ஆய்வு மையத்தின் இயக்குநர் அலெக்ஸாண்டர் கிண்ட்ஸ்பெர்க் கூறும்போது, முதற்கட்டமாக குறைந்த அளவு மருந்துகளே பயன்பாட்டுக்கு வரும். அவை மருந்து நிலையங்களில் விற்பனைக்கு வழங்கப்படமாட்டாது என்று தெரிவித்தார்.

# ஆப்கானில் தாக்குதல் 4 பேர் பரிதாபச் சாவு



ஆப்கானிஸ்தானின் வடக்கு மாகாணத் தலைநகரான பர்யாப்பினின் மயாம்னா பகுதியில் உள்ள ஒரு மசூதியில் நடந்த துப்பாக்கிச் சூட்டுத் தாக்குதலில் 4பேர் கொல்லப்பட்டனர். இது குறித்து மேலும் தெரிய வருவதாவது:

குறித்த மசூதியில் தொழுகை நடந்து கொண்டிருந்தபோது திடீரென மசூதிக்குள் நுழைந்த துப்பாக்கிதாரிகள் 2 பேர் அங்கிருந்தவர்களை கண்மூடித்தனமாகத் துப்பாக்கியால் சுட்டனர். மசூதிக்குள் இருந்தவர்கள் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள அலறியடித்தபடி ஓடினர்.

இந்தத் துப்பாக்கிச் சூட்டில் 4 பேர் சம்பவ இடத்திலேயே சாவடைந்தனர். 3 பேர் படுகாயங்களுக்குள்ளாகினர். தாக்குதல் குறித்து அறிந்து சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தியவர்களைச் சுட்டுக் கொன்றனர். இந்தத் தாக்குதலுக்கு உடனடியாக எந்த ஒரு ஆயுத அமைப்பும் பொறுப்பேற்கவில்லை. தலீபான்களே இந்தத் தாக்குதலை நடத்தினர் என்று மயாம்னா நகரப் பொலிஸார் தெரிவித்தனர்.

**பின்னணி**

ஆப்கானிஸ்தானில் 19 ஆண்டுகளுக்கும் மேலாக அந்த நாட்டு அரசுக்கும் தலிபான்களுக்கும் இடையே உள்நாட்டுப் போர் நடந்து வருகிறது. தற்போது அந்தப் போர் உச்சமடைந்துள்ளது. பொலிஸார் மற்றும் இராணுவத்தினரைக் குறிவைத்தும் அப்பாவி மக்களைக் குறிவைத்தும் ஆயுததாரிகள் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

சீனாவின் ஜியாங்சி மாகாணத்தின் போயாங் ஏரிக்கு அருகிலுள்ள கிராமத்தில், பெய்த கடும் மழையைத் தொடர்ந்து அங்குள்ள கட்டடங்கள் நீரில் மூழ்கின. வெள்ள நீர் வடிந்தோடாத நிலையில் அந்தக் கிரமமே வெள்ளக் காடாகியுள்ளது.



# டோக்கியோவுக்கு சிவப்பு எச்சரிக்கை!

கொரோனாத் தொற்றுப் பரவல் அதிகரித்து வருவதைத் தொடர்ந்து ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து டோக்கியோ ஆளுநர் யுரிக்கோ கொய்கே கூறும்போது -

டோக்கியோவில் கடந்த சில நாள்களாக் கொரோனாத் தொற்று அதிகரித்து வருகிறது. இதனைத் தொடர்ந்து நிலைமையைக் கட்டுக்குள் கொண்டுவருவ தற்காக இன்று (புதன்கிழமை) முதல் சிவப்பு எச்சரிக்கை (அவசர நிலை) விடுக்கப்படுகிறது. பொது மக்களுக்கும் வர்த்தகர்களுக்கும் எச்சரிக்கை விடுக்கும் சூழ்நிலையில் நாம் இருக்கிறோம்' என்றார்.

மேலும், தேவையற்ற பயணங்களைத் தவிர்க்குமாறு டோக்கியோ வாசிகள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். ஜப்பான் தலைநகர் டோக்கியாவில் உள்ள நாடக அரங்கு ஒன்றில் நாடக உறுப்பினர் ஒருவருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டதைத் தொடர்ந்து அந்த நாடக அரங்கங்களில் அண்மைய நாள்களில் கலந்து கொண்ட பார்வையாளர்கள் அனைவரையும் பரிசோதனை செய்யும் முயற்சியில் அரசு இறங்கியுள்ள நிலையில் இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஜப்பானில் 22ஆயிரத்து 220 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ள நிலையில் 982 பேர் சாவடைந்துள்ளனர். பிற நாடுகளுடன் ஒப்பிடுகையில் ஜப்பானில் கொரோனாத் தொற்று எண்ணிக்கை அதிகம் இல்லையென்றாலும், தற்போது புதிய தொற்றுகள் அதிகரிக்கத் தொடங்கியுள்ள நிலையில், ஜப்பான் அரசு தடுப்பு நடவடிக்கைகளைத் துரிதப்படுத்தியுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir

# முஸ்லிம் காங்கிரஸுடன் மீண்டும் சேகு இஸ்ஸதீன்



ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் முன்னாள் தவிசாளரும், முன்னாள் அமைச்சருமான, சட்டத்தரணி சேகு இஸ்ஸதீன் (வேதாந்தி) தனது தாய் கட்சியினூடாக எதிர்வரும் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியின் வெற்றிக்கு ஒத்துழைப்பு வழங்க முன்வந்துள்ளார். கட்சித் தலைவர் ரவூப் ஹக்கீம் பிரதம அதிதியாக கலந்து கொண்ட – அட்டாளைச்சேனையிலும், அக்கறைப்பற்றிலும் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற – தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் சேகு இஸ்ஸதீன் மேடையேறினார்.

## புதிய கடற்படை தளபதியாக நிஷாந்த

இலங்கை கடற்படையின் 24ஆவது கடற்படைத் தளபதியாக வயிஸ் அட்மிரல் நிாந்த உலுகேதென்ன நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் இன்று புதன்கிழமை இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் நிஷாந்த உலுகேதென்ன கடற்படைத் தலைமை நிர்வாகியாகச் செயற்பட்டுள்ளார்.

நாட்டின் 23ஆவது கடற்படைத் தளபதியாகச் செயற்பட்ட பியல் டி சில்வா ஓய்வு பெற்றதைத் தொடர்ந்து, இவர் 24ஆவது கடற்படைத் தளபதியாக நிய மிக்கப்பட்டுள்ளார்.

## திருகோணமலையில் 55 முறைப்பாடுகள்

(ஹஸ்பர் ஏ ஹலீம்)

நடைபெறவுள்ள பொதுத்தேர்தல் தொடர்பில் திருகோணமலை மாவட்டத்தில் இற்றைவரை 55 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன என மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலரும் மாவட்ட அரசாங்க அதிபருமான ஜே.எஸ்.டி. எம்.அசங்க அபேவர்தன தெரிவித்தார்.

அத்துடன் கடந்த 13,14 மற்றும் நேற்றைய தினத்தில் இடம்பெற்ற அஞ்சல் வாக்கு பதிவிடும் நடவடிக்கை உதவி தெரிவத்தாட்சி அலுவலர்களின் மேற்பார்வையின் கீழ் சுமுகமாக நடைபெற்றதாகவும் இன்றும் நாளையும் முப்படை,பொலிஸ் திணைக்களம் மற்றும் மாவட்ட செயலகத்தைச் சார்ந்த உத்தியோகத்தர்களுக்கான அஞ்சல் வாக்கு பதிவு இடம்பெறவுள்ளது, அதற்குரிய ஏற்பாடுகள் நிறைவுபெற்றுள்ளன எனவும் தெரிவத்தாட்சி அலுவலர் மேலும் தெரிவித்தார்.

## பெப்ரவரி மாத மின் கட்டணமே மார்ச், ஏப்ரல், மே மாதங்களிலும்

மின் பாவனையாளர்களின் பெப்ரவரி மாத மின் பட்டியல் கட்டணமே அடுத்து வரும் மூன்று மாதங்களுக்கு அறவிடப்படும் என்று மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு அறிவித்துள் ளது.

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தும் வகையில் மார்ச் நடுப்பகுதி முதல் நாட்டில் கொண்டுவரப்பட்ட ஊரடங்கு உள்ளிட்ட கட்டுப்பாடுகளால் மார்ச், ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் மின்சாரக் கட்டணம் அதிகளிவில் அறவிடப்பட்டதாக மின் பாவனையாளர்களால் முறைப்பாடு செய்யப்பட்டது.

இந்த நிலையில் அது தொடர்பில் ஆராய குழு ஒன்று நியமிக்கப்பட்டது. அந்தக் குழுவின் பரிந்துரை அமைச் சரவையில் முன் வைக்கப்பட்டது.

அமைச்சரவையின் தீர்மானத்தின் பிரகாரம் மின் பாவனையாளர்கள், பெப்ரவரி மாத மின் பட்டியல் குறிப்பிடப்பட்ட கட்டண அளவையே மார்ச், ஏப்ரல் மற்றும் மே மாதங்களுக்கு செலுத்த முடியும் என்று மின் சக்திமற்றும்எரிசக்திஅமைச்சுதெரிவித்துள்ளது.

## பிரதமர் பதவிக்குப் பொருத்தமானவர்களில் ரணிலைத் தவிர மாற்றுத் தெரிவுகள் இல்லை

### முன்னாள் எம்.பி. ஆசு மாரசிங்க தெரிவிப்பு



ஐக்கிய தேசியக் கட்சி இன்னும் இரு வருடங்களில் அதன் புதிய தலைவரை அறிவிக்கும். இளம் தலைவர்களிடம் பொறுப்பைக் கையளிக்க வேண்டும் என்ற நோக்கத்திலேயே ரணில் விக்கிரமசிங்கவும் இருக்கின்றார். எனினும்,தற்போதைய நெருக்கடி நிலையில் நாட்டை சரிவர நிர்வகிக்கக்கூடிய சிறந்த பொருளாதார இலக்கு அவரிடம் மாத்திரமே காணப்படுகின்றது. எனவே, எதிர்வரும் பொதுத்தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி அரசு அமைக்கும் பட்சத்தில், பிரதமர் பதவிக்குப் பொருத்தமானவர்களில் ரணில் விக்கிரமசிங்கவைத் தவிர மாற்றுத் தெரிவுகள் இல்லை.

– இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஆசு மாரசிங்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாடாளுமன்றத் தேர்தலின் பின்னர் தற்போதுள்ள ஆளுந்தரப்புடன் இணைந்து அரசு அமைக்க வேண்டிய எந்தவொரு தேவைப்பாடும் எமக்கில்லை. ஐக்கிய தேசியக் கட்சி அரசொன்றை அமைப்பதே எமது ஒரே எதிர்பார்ப்பாக இருக்கின்றது. இது குறித்து எமது கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் தெளிவுபடுத்தலை வழங்கியிருந்தார். எனவே, நாம் அரசுடன் 'டீல்' ஒன்றைச் செய்திருப்பதாக எவரேனும் கூறுவார்களாயின், உண்மையில் அவ்வாறு கூறுபவர்கள்தான் டீலைச் செய்திருக்கின்றார்கள்.

ரணில் விக்கிரமசிங்க சிங்கள மொழியில் பாடசாலைக் கல்வியைப் பெற்று, பின்னர் கொழும்புப் பல்கலைக்கழகத்தில் சட்டமாணிப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டவர். நாட்டின் இலவசக் கல்வியின் ஊடாகவே தனது கல்வியைப் பூர்த்திசெய்துகொண்ட ஒருவராவார். ஆனால், சில தலைவர்கள் 'நான் தான் இந்த நாட்டிலேயே மிகவும் கற்றறிந்தவன்' என்று கூறிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், அவர்கள் குறைந்த பட்சம் ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சையிலேனும் சித்தியடைந்திருப்பார்களா என்று தெரியவில்லை.

தாம் ஆட்சியமைத்தால் ஒவ்வொரு குடும்பத்துக்கும் 25 ஆயிரம் ரூபாவை வழங்குவதாக சஜித் பிரேமதாஸ கூறுகின்றார். சாதாரணதரப் பரீட்சையில்கூட சித்தியடையாததால் அவருக்குத் தனியாகக் கணித பாடத்தைக் கற்பிக்க வேண்டியிருக்கின்றது. ஒரு வாக்குறுதியை வழங்குவதற்கு முன்பாக அது நடைமுறையில் சாத்தியமானதா என்றுகூட சிந்திக்கமாட்டார்களா என்ற கேள்வியே எழுகின்றது. சஜித் பிரேமதாஸ ஜனாதிபதித் தேர்தலின்போது கூறிய நடைமுறைச் சாத்தியமற்ற கருத்துக்களையேதற்போதும்கூறிவருகின்றார்.

கொரோனா வைரஸ் பரவலையடுத்து நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி நிலையை சீர்செய்வதற்கு முதலில் ஒவ்வொரு குடும்பத்தினதும் பொருளாதாரத்தை சரிசெய்வதற்கான செயற்திட்டமொன்று தேவைப்படுகினறது. அதனை முன்நிறுத்தியே ஐக்கிய தேசியக் கட்சி செயற்பட்டு வருகின்றது. அதேபோன்று நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பியிருப்பதுடன், அதற்கான நிதியையும் கடந்த காலத்தில் திரட்டிக் காண்பித்திருக்கின்றோம்.

அதேபோன்று அரசு விசேட ஜனாதிபதி செயலணிகளை உருவாக்கி, அவற்றின் உறுப்பினர்களாக இராணுவத்தினரை நியமித்து ஒருபுறம் மக்களின் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்திவரும் அதேவேளை, மறுபுறத்தில் தமது தொழிற்சங்கங்களின் ஊடாக எதிரணியினர் மீது தாக்குதல்களையும் நடத்தி வருகின்றது. அத்தகைய சில தாக்குதல் சம்பவங்கள் பதிவாகியிருப்பதுடன், அதுபற்றி உடனடியாக ஜனாதிபதி கோட்டாபாய ராஜபக்ஷ அவதானம் செலுத்த வேண்டும் – என்றார்.

# இந்தியப் பேரரசை பயன்படுத்தத் தவறியமைக்கு விக்கினேஸ்வரன்தான் பொறுப்பேற்க வேண்டும்!

## இப்படிக் கூறுகின்றார் மருத்துவர் சத்தியலிங்கம்



(ந.லோதயாளன்)

யாழ்ப்பாணம்,ஜூலை 14

இந்தியப் பேரரசைக் கடந்த காலத்தில் சரியாகப் பயன்படுத்தத் தவறிவிட்டோம் என சி.வீ.விக்னேஸ்வரன் கூறுவது கண்கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம் செய்வதற்கு ஒப்பான செயல் என வவுனியா மாவட்ட தமிழ் அரசுக் கட்சியின் வேட்பாளரான மருத்துவர் ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.

சி.வி.விக்னேஸ்வரன் வடக்கு மாகாண முதலமைச்சராக வந்த காலம் ஓர் சர்வதேச எதிர்பார்ப்பு இருந்த காலம் . அக்காலத்தில் அபிவிருத்திக்காக எதனைக் கோரியிருந்தாலும் இந்திய அரசு வழங்கியிருக்கும். ஏதாவது ஒன்றையேனும் பெயர் சொல்லும் அளவிற்கேனும் பெற்றாரா என்றால் இல்லை என்பதே உண்மையாகும். அதனைவிட இரு தடவைகள் இந்தியா சென்றும் எதனையும் அவர் கோரவில்லை.

இதற்கு மாறாகவே செயல்பட்டார்.

சொந்தக் கட்சியினால் பலாலி விமான நிலையத்தை சர்வதேச விமான நிலையமாக புனரமைத்துத் தருமாறு இந்திய அரசிடம் கோரியபோது, அதனை இப்போது புனரமைக்க வேண்டாம் எனக் கோரியவரே இதே விக்னேஸ்வரன்தான். அதற்கு அவர் கூறிய நியாயம் விமான நிலையத்தை புனரமைத்துவிட்டு மக்களின் நிலத்தை விட மறுப்புத் தெரிவிப்பார்கள் என்றார். அது அவரது கையாலாகாத்தனத்தையே எடுத்துக் காட்டியது. இருப்பினும் கூட்டமைப்பின் தொடர் முயற்சியினால் அது நடந்தேறியது.

இதேபோன்று பாரதப் பிரதமர் அவர்கள் வரலாற்றுச் சிறப்பு மிக்க ஓர் பயணத்தை யாழ்ப்பாணத்திற்கு மேற்கொண்டார். அதன்போது வடக்கு மாகாண முதலமைச்சர் என்ற வகையில் வர வேற்று கலந்துரையாடிய வேளையில் ஒப்புக்கேனும் இந்த விக்னேஸ்வரன் எதனையும் கோரவே இல்லை. மாகாண இளைஞர்களிற்காக வேலை வாய்ப்பினை வழங்கும் வகையிலான 3 தொழிற்சாலைகளையேனும் கோரியிருக்கலாம்.

ஆனால் எமது முதலமைச்சரும் மாகாண மக்களின் விடிவிற்காக ஒன்றை கோரி மனுக் கையளித்தார். முதலமைச்சர் மனுக் கையளித்திருக்கின்றார், எமது மக்களின் பிரச்சினைகளைப் பட்டியலிட்டிருப்பார் என நம்பி அப் பட்டியலைத் தேடிய போது எமக்கு மட்டுமல்ல மாகாண மக்களின் இதயங்களில் இடிவிழுந்தமை போன்று அந்தப் பட்டியல் வெளிவந்தது. அதில் முதல்வர் கோரியது பாலியல் குற்றவாளிகள் என மரபணு மூலம் உறுதி செய்யப்பட்டு தண்டனை வழங்கிய்குற்றவாளிகளை விடுவிக்குமாறு கோரி நின்றமைதான்.

இதனைச் செய்து வழங்காதமையால் தான் இந்தியப் பேரரசைக் கடந்த காலத்தில் சரியாகப் பயன்படுத்த தவறிவிட்டோம் எனக் கூறுகின்றாரோ தெரியவில்லை. ஆயுதப் போராட்ட காலத்திற்கு பின்பு கிடைத்த நல்ல சந்தர்ப்பத்தை தவற விட்டதற்கான தார்மீகப் பொறுப்பினை ஏற்க வேண்டியவரே இந்த விக்னேஸ்வரன் தான். – என்றார்.

# ஆடிப் பிறப்பின்று கூடிப் பனங்கட்டி கூழுங் குடிப்போம்!

**“ஆடிப் பிறப்புக்கு நாளை விடுதலை
ஆனந்தம் ஆனந்தம் தோழர்களே
கூடிப் பனங்கட்டிக் கூழும் குடிக்கலாம்
கொழுக்கட்டை தின்னலாம் தோழர்களே”**

ஆம்! ஆனி மாதக் கடைசி நாளான நேற்று புதன்கிழமையன்று இந்தப் பாடலை தமிழ் மக்கள் அனைவரும் அவரவர் வாழ்வு ஆரோக்கியம் பெறவும், ஏனைய சகோதரர்களின் சக வாழ்வு மேம்படவும் பாடி மகிழ்வது நன்மை பயத்திருக்கும். இன்று வியாழன்றும் - ஆடிப் பிறப்பன்றும் - இப்பாடல் உயிர்பெறும்.

தங்கத் தாத்தா என அழைக்கப்படும் நாவலியூர் சோமசுந்தரப்புலவர் அவர்களால் இப்பாடல் இயற்றப் பட்டுள்ளது. இன்று 16.07.2020 ஆம் திகதியன்று ஆடிப்பிறப்பாகும். சிறுவர்களும் பெரியவர்களும் பல்லு விழுந்த தாத்தா பாட்டிமாரும் பாமர மக்களும் இரசித்துச் சுவைத்து உள்ளம் பூரிக்குமாறு ஆடிப் பிறப்பன்று காய்ச்சப்படும் ஆடிக்கூழானது மணக்க மணக்க வாயூறும் படியாகக் காய்ச்சி வன்னப்பலா இலை கோலி மடித்து அள்ளியும் கிள்ளியும் சொல்லி யும் குடிக்கப்படும்.

ஒவ்வொரு வீட்டிலும் அம்மாமார் அனைவரும் ஆடிப்பிறப்பன்று தெய்வப் பெண்கள் போல, தோய்ந்து, குளித்து, தலைவாரிப் பூச்சூடித் தோய்த் துலர்ந்த ஆடை உடுத்து, குங்குமப் பொட்டு வைத்து, இறைவன், இறைவி, தேவர்கள் யாவரையும் வணங்கி மகிழும்படியாகப் புதுப்பொலிவோடு ஆடிப் பிறப்பை வரவேற்பார்கள்.

தேவர்களுக்கு ஒரு வருடம் ஒரு நாளாகக் கருதப் படுவதனால், தை மாதம் தொடக்கம் ஆனிமாதம் வரை பகலாகவும், ஆடி மாதம் தொடக்கம் மார்கழி மாதம் வரை இரவாகவும் இருக்கும். இது உத்தராயணம், தட்சணாயனம் என்பதாகப் போற்றப்படும். இந்த இரண்டுக்கும் இடையேயுள்ள காலத்தைப் பேறாக்குவதும் ஆயுளை நூறாக்குவதும் பாவ தோங்களை நீறாக்குவதும் ஆடியாகும்.

தேவர்களின் ஆசீர்வாதம் கிடைப்பதற்காகவே, ஆடிப்பிறப்பு, ஆடிக்கூழ், ஆடிச்செவ்வாய், ஆடிச் சுவாதி, ஆடிக்கிருத்திகை, ஆடி அமாவாசை, ஆடி வேல், ஆடிவெள்ளி, ஆடிப்பால், ஆடி விதை, ஆடிப் பெருக்கு, ஆடிப்பதினெட்டு, ஆடிப்பூரம், ஆடிக்குருவி, ஆடித்தபசு, ஆடித்துளசி, ஆடிப்பிறை, ஆடி உழவு, ஆடிப் பௌர்ணமி, ஆடித்தீர்த்தம் என ஆடிமாதம் கோடி பெறும். நாடித் தேடித் தொழுவார் பால் சௌபாக்



கியம் ஓடியே கூடி வரும். எனவே, ஆடிமாதத்தைப் பேணி நடப்பதற்கு வாலாயமாக ஆடி மாதப்பிறப்பு நமக்குப் பேறாகிறது.

அதிகாலை துயிலெழுந்து, காலைக்கடன்கள் முடித்து, நீராடி, தோய்த்துலர்ந்த ஆடை தரித்து, ஆடிப்பிறப்பை வரவேற்றுக் கொண்டாடும் முகமாக, வாசலில் கோலமிட்டு, குத்து விளக்கேற்றி, தோரணமும் கும்பமும் ஏற்றிட தேவ சம்பத்துகளும், பிதிர் காரியர்களும் வந்திறங்கி குடும்பத்தவர்களை ஆசீர்வதிப்பர். பிதிர்களுக்கு இன்பம் பயக்கும்.

இதையறிந்து அம்மாவும் அப்பாவும் பிள்ளைகளும் ஆடிக் கூழுக்கான அத்தனை பொருள்களோடு தயார் செய்து கொள்வார்கள். வீடோ களைகட்டும்! தாச்சிச்சட்டி, உரல், உலக்கை, அகப்பை, விறகு, அடுப்பு, சுளகு, அரிக்கன், பனங்கட்டிக் குட்டான், தேங்காய்ச் சொட்டு, வாசனைத் திரவியங்கள், பயறு, பலாவிலை, சர்க்கரை, பால், பழம், இளநீர்,





தேங்காய், வெற்றிலை, பாக்கு, தூபதீபம், கற்பூரம், சாம்பிராணி, பானை, சட்டி என ஒவ்வொரு தமிழ் இல்லமும் ஆடிமாதப் பிறப்புக்கான வாசனையை வாசல் தோறும் இயம்பி நிற்கும். அம்மாவை எவருமே கட்டுப்படுத்த முடியாதவாறு தடல் புடலாக வேலைகளைத் தான் சுமந்தவாறு மௌனமாகிக் களைத்துப் போய் இரட்டிப்பாகக் கருமமாற்றுவார். குடும்பத்தவர்கள் ஒன்று சேர்ந்து அம்மா செய்து கொண்டிருக்கும் ஆடிக் கூழுக்கான ஆயத்த வேலைகளைப் பார்த்துப் பசியாறிக் கொண்டிருப்பார்கள். அம்மாவை வியந்து கொள்வார்கள்.

தற்காலமோ பாரிய மாற்றம் கண்டுள்ளது. வீட்டில் எவருமே இருக்க நியாயமில்லை. அப்பாவுக்கும் அம்மாவுக்கும் வேலை ஒருபுறம். படிப்பு மறுபுறம். வகுப்புகள் வேறு. பரீட்சைகள் வேறு. பிள்ளைகளின் மேலதிகக வகுப்புகள் ஆறுமணி வரை. பிள்ளைகள் வீடு வரும் வரை கையும் ஓடாது,காலும் ஓடாது தாய்க்கு. ஆடிக் கூழ் எப்படிச் சாத்தியமாகும்? ஒரேயடியாகக் காலையிலே காய்ச்சி குளிர்சாதனப் பெட்டியில் அடக்கமாக மூடி வைத்து விட்டால் அவரவர் விரும்பிவாறு விரும்பிய நேரத்தில் குடிக்கலாம். கலாவிலை தேடிப் பொறுக்கிக் கோலி எடுத்து அம்மா அகப்பையால் துழாவி அள்ளியள்ளி வார்க்க நேரமிருக்காது. பொறுமையுமிருக்காது.

எது, எப்படியிருந்தாலும் தயவு செய்து ஆடிப்பிறப்பன்று எல்லோரும் ஒன்றாக இருந்து ஆடிக் கூழினை அள்ளிவார்த்துக் குடிக்க முயன்று பாருங்கள். வெல்ல முடியும்.

அது சாத்தியமாகாது போனால் கவலைப்பட வேண்டாம் எல்லாவற்றிக்கும் மேலாக நவாலியூர் சோமசுந்தரப்புலவர் பாடியருளிய ஆடிப்பிறப்புக்குரிய பாடலையாவது கூழ் குடிப்பதற்கு முன்னதாக ஒரு முறையோ இரு முறையோ பாடுவீர்களாயின் நீடித்த ஆயுள் ஆரோக்கியம் பெறுவீர்கள். வானவரும் வந்து இரசிப்பர்.

மாவட்டச் செயலகம், பிரதேசச் செயலகம், சனசமூக நிலையங்கள், இந்து நிறுவனங்கள், பாடசாலைகள், இசை ஆசிரியர் கழகங்கள், சிறுவர் - முதியோர் இல்லங்கள், தமிழ்ச் சங்கங்கள், ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகள் ஆடிப் பிறப்புத் தொடர்பில் அக்கறை காட்டி வருவது பெரும் மகிழ்ச்சியைத் தருகிறது. ஒவ்வொரு வீட்டிலும் சோமசுந்தரப் புலவரை வரவேற்று ஆடிப் பிறப்பன்று இந்தப் பாடலைப் பாடி கூழ் காய்ச்சி கூழ் குடித்து மகிழ்வீர்களாக. இந்தப் பாடலில் காணப்படுகின்ற எதுகை மோனை சந்தம் ஓசை பொருள் யாவுமே அற்புதம். ஆனந்தம். பிரம்மாதம். பலே!சோமசுந்தரப் புலவரின் காலம் 1878.05.25 தொடக்கம் 1953.07.10 வரை தமிழ் அன்னைக்கு வரப்பிரசாதமான பேறான காலமாகும். இதோ கூழ் மணக்கும் பாடல். பாடிப்பாருங்கள்.

**ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை
ஆனந்த ஆனந்தம் தோழர்களே!
கூடிப்பனங்கட்டி கூழுங் குடிக்கலாம்
கொழுக்கட்டை தின்னலாம் தோழர்களே!**

**பாசிப்பயறு வறுத்துக்குத்திச் செந்நெல்
பச்சை அரிசி இடித்துத் தெள்ளி,
வாசப்பருப்பை அவித்துக்கொண்டு நல்ல
மாவைப் பதமாய் வறுத்தெடுத்து,**

**வேண்டிய தேங்காய் உடைத்துத் துருவியே
வேலூரிற் சக்கரையுங்கலந்து,
தோண்டியில் நீர்விட்டு மாவை அதில்கொட்டி
சுற்றிக் குழைத்துத் திரட்டிக்கொண்டு.**

**வில்லை வில்லையாக மாவைக் கிள்ளித்தட்டி
வெல்லக் கலவையை உள்ளே இட்டு
பல்லுக் கொழுக்கட்டை அம்மா அவிப்பாளே
பார்க்கப் பார்க்கப் பசி தீர்ந்திடுமே!**

**பூவைத் துருவிப் பிழிந்து பனங்கட்டி
போட்டு மாவுருண்டைப பயறுமிட்டும்
மாவைக் கரைத்தம்மா வார்த்துத் துழாவுவள்
மணக்க மணக்க வாயூறிடுமே**

**குங்குமப் பொட்டிட்டு பூமாலை சூடியே
குத்து விளக்குக் கொழுத்தி வைத்து
அங்கிளநீர் பழம் பாக்குடன் வெற்றிலை
ஆடிப் படைப்பும் படைப்போமே**

**வன்னப் பலாவிலை, ஓடிப்பொறுக்கியே
வந்து மடித்ததைக் கோலிக்கொண்டே
அன்னை அகப்பையால் அள்ளி அள்ளி வார்க்க
ஆடிப் புதுக்கூழ் குடிப்போமே**

**வாழைப் பழத்தை உரித்துத் தின்போம் நல்ல
மாவின் மாவின் பழத்தை அறுத்துத் தின்போம்
கூழைச் சுடச் சுட ஊதிக்குடித்துக்
கொழுக்கட்டை தன்னைக் கடிப்போமே.**

ஆம்! ஆடிப்பிறப்பன்று காய்ச்சப்படும் கூழினால் வானுலகை ஆளும் தேவர்கள் மட்டுமல்லர், உயிர் நீத்த சலக ஆத்மாக்களும் எம்மோடு கூட இருந்து இன்பம் பயப்பார்கள்.



கே.எஸ்.சிவஞானராசா
(கொக்குவில்)

காலைக்கதிர் Kalaikkathir

# மன்னாரில் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு ஈரோஸ் ஜனநாயக முன்னணி முழு ஆதரவு!

## தமிழர்களின் பிரதிநிதித்துவத்தைப் பாதுகாக்க தமிழ்ப் பேசும் மக்களை ஒன்றிணைய அழைப்பு



மன்னார், ஜூலை 16

தமிழ் பேசும் மக்களின் அரசியல் உரிமைகளை வென்றெடுக்கவும் தமிழரது பிரதி நிதித்துவத்தைப் பாதுகாக்கவும் எதிர் வரும் 5ஆம் திகதி நடை பெறவிருக்கும் பொதுத் தேர்தலில் போட்டியிடும் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு ஈரோஸ் ஜனநாயக முன்னணி தனது பூரண ஆதரவை தெரிவித்துள்ளது.

மன்னார் பேசாலையில் நேற்றுப் புதன்கிழமை காலை இடம் பெற்ற தமிழ் தேசியக்கூட்டமைப்பின் வன்னி மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தலைமையிலான நிகழ்வு ஒன்றில் ஈரோஸ் பிரதி நிதிகள் இணைந்து கொண்டு தமது ஆதரவை தெரிவித்துள்ளனர்.

இவ்விடயம் தொடர்பாக ஈரோஸ் ஜனநாயக முன்னணியின் பொதுச் செயலாளர் இ.சிறி இராஜராஜேந்திரா ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தார். அவர் கூறியவை வருமாறு:-

வடக்கு - கிழக்கு, மலையகம் உட்பட இலங்கையின் சகல பாகங்களிலும் வசிக்கும் தமிழ் பேசும் மக்கள் சர்வதேச நியமங்களுக்கேற்ப உரிமைகளைப் பெற்று சமாதானத்துடனும், சந்தோசமாகவும் வாழக் கூடிய வகையில் அவர்களது சிவில், அரசியல், மற்றும் பொருளாதார, சமூக, கலாச்சார உரிமைகளுடன் அனைவரது அடிப்படை மனித உரிமைகள் பாதுகாக்கப்பட உழைக்க வேண்டும் என்ற அடிப்படையிலேயே மக்களால் அடையாளம் காணப்பட்ட பிரதான தமிழ் அரசியல் கட்சிகளை இணைத்து தமிழ் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது.

இதனடிப்படையில் தமிழர் பிரதி நிதித்துவங்களை பாதுகாக்க தமிழ் பிரதி நிதிகளை நாடாளுமன்றம் அனுப்புவது தமிழ் பேசும் மக்களின் பொறுப்பாகும்.

இலங்கை நாடாளுமன்றம் இனவாத அடிப்படையிலே கட்டமைக்கப்பட்டிருப்பதால் அதன் முக்கிய அரசியல் தீர்மானங்களும் முடிவுகளும் இனவாதக் கட்டமைப்பை பலப்படுத்துவதையே உறுதி செய்யும்.

கடந்த காலங்களில் நாடாளுமன்றத்தினால் கொண்டுவரப்பட்ட சட்டங்கள் இதனையே உறுதி செய்துள்ளன.

தமிழ் இனத்தை அழிப்பதற்காக இலங்கை நாடாளுமன்றத்தினால் கொண்டுவரப்பட்ட பயங்கரவாதத் தடைச் சட்டம், இராணுவத்திற்கான விசேட அதிகாரச்சட்டம், இராணுவத்திற்க்கான அதிக நிதி ஒதுக்கீட்டுக்கான சட்டங்கள் உட்பட பல்வேறு சட்டங்களின் பட்டியல்கள் நீண்டு கொண்டே போகும்.

தொடர்ந்து மாறி மாறி ஆட்சிக்கு வரும் சிங்கள பேரினவாத ஆட்சியாளர்கள் பெரும்பான்மை மக்களுக்கு சாதகமான திட்டங்களை வகுத்து செயல்படுவதுடன் எம் இனத்தை அழிப்பதற்கான செயற்திட்டங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில் இதனை எதிர்த்து அரசியல் முன்னெடுப்புக்களை நாடாளுமன்றத்திலோ சர்வதேசத்திலோ பேசக்கூடிய மக்களால் இனங்காணப்பட்ட சக்தியாக தமிழ் தேசிய கூட்டமைப்பு உள்ளது.

விமர்சனங்களுக்கப்பால் அனைத்து தழிழ் தரப்புக்களும் விட்டுக்கொடுப்புக்களுடன் ஐக்கியமாவதுடன் அனைத்து தமிழ் பேசும் மக்களும் ஒன்றிணைந்து தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கு வாக்களித்து அதனைப் பலப்படுத்துவதே இன்றைய தேவையாகவுள்ளது.

இலங்கை தமிழ் அரசுக்கட்சியின் தலைவர் அமரர் தந்தை செல்வநாயகம் அவர்கள் எமது தமிழ் தலைமைகளின் ஒற்றுமையுடன் தமிழ் பேசும் மக்களின் உரிமையை வென்றெடுப்பதற்காகவே 1976 ஆம் ஆண்டு அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், இலங்கை தமிழ் அரசுக்கட்சி மற்றும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் போன்ற பிரதான கட்சிகளை ஒன்றிணைத்து தமிழர் விடுதலைக்கூட்டணி என்ற அமைப்பை உருவாக்கினார்.

அதே போன்று தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் அவர்கள் 2001 ஆம் ஆண்டு தமிழ் தேசிய கூட்டமைப்பை உருவாக்கினர்.

2001 ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை சுமார் 19 வருடகாலத்திற்குள் தமிழர் விடுதலைக்கூட்டணி, ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் போன்ற கட்சிகளும் தமிழ் தேசியக் கூட்டமைப்பிலிருந்து செயற்பட்ட முக்கிய பிரமுகர்களும் தனித்தனியே பிளவுபட்டு பிரிந்து சென்று கட்சிகள் அமைத்து செயல்படுகின்றனர்.

இது தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பலவீனத்தையே காட்டுகின்றது. எனவே தமிழ் தேசியக் கூட்டமைப்பானது தனது செயற்பாடுகளை ஆரோக்கியமான விமர்சனத்திற்கு உட்படுத்தி, அனைத்து தமிழ் தலைமைகளையும் உள்வாங்கி, தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான பயணத்தை மேற்கொள்ள வேண்டும்.

அனைத்து தமிழ் தரப்புக்களும் இவ்வாறு பிளவுபட்டு செயற்படுவதனால் உரிய இலக்கிலிருந்து விடுபட்டு தமிழ் பேசும் மக்களுடைய வாழ்வை சீர்குலைத்த வரலாற்றுத் துரோகிகளாக கருதப்படுவார்கள்.

தமிழர் தலைமைகளின் ஒற்றுமையை உணர்ந்து ஈழப்புரட்சி அமைப்பு ஈரோஸ், தமிழீழ விடுதலை இயக்கம், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழீழ விடுதலைப் புலிகள் போன்ற 04 பிரதான இயக்கங்களும் ஒன்று சேர்ந்து ஈழ தேசிய விடுதலை முன்னணி என்ற அமைப்பை 1984 ஆம் ஆண்டு உருவாக்கிக் கொண்டன.

இச் செயற்பாட்டினை எமது ஈரோஸ் இயக்கமே முன்னின்று செயற்படுத்தியது. இந்த ஈழ தேசிய விடுதலை முன்னணியானது தமிழர்களின் ஒற்றுமையை உலகிற்கு அறியவைப்பதற்கே உருவாக்கப்பட்டது.

அதே வேளை எமது ஈரோஸ் இயக்கமானது 1985, 1986 ஆம் ஆண்டு கால கட்டத்தில் போராட்ட இயக்கங்களிடையே மோதல்கள் ஏற்பட்ட வேளை மோதல்களை நிறுத்தி சமாதானமாக செல்ல வேண்டுமென அறிக்கை வெளியிட்டது.

2009 இல் ஆயுதப்போராட்டம் முடிவுக்கு கொண்டு வரப்பட்ட பின்னர் தேசியத்தின் குரல் நலிவடைந்து போய்விட எவ்விதத்திலும் அனுமதிக்க முடியாது என்ற அடிப்படையில் அப்போது தேசியத்தின் குரலாய் ஒலித்த தமிழ் தேசிய கூட்டமைப்புக்கே நாம் நமது ஆதரவினை வழங்கி வந்தோம்.

அதேவேளை தமிழ் தேசிய கூட்டமைப்பின் கடந்த கால செயற்பாடுகளில் அவர்கள் பற்றிய ஆரோக்கியமான விமர்சனங்களை நாம் அவ்வப்போது முன்வைப்பதற்கு என்றைக்கும் தயக்கம் காட்டியதில்லை.

எமது அமைப்பானது நடை பெறவிருக்கின்ற நாடாளுமன்ற பொதுத்தேர்தலில் தமிழ் தேசிய கூட்டமைப்பு தவிர்ந்த எந்த கட்சிக்கும் ஆதரவு வழங்குவதற்கான முடிவை எடுத்திருக்கவில்லை என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சில இனவாதக்கட்சிகள் பிரித்தாளும் நோக்குடன் தமிழ் பேசும் மக்களின் வாக்குகளை சிதறடித்து எமது பிரதிநிதித்துவத்தை குறைப்பதற்கு சிறுசிறு குழுக்களையும் சில அரசியல் கட்சிகளையும் பயன் படுத்துகின்றன. இத்தகைய நயவஞ்சமான நடவடிக்கைகளை முறியடிப்பற்கு தமிழ் பேசும் மக்கள் அனைவரும் ஒற்றுமையுடன் தமிழ் தேசிய கூட்டமைப்புக்கு வாக்களித்து வெற்றிபெறச் செய்யவேண்டுமென ஈரோஸ் ஜனநாயக முன்னணி கேட்டுக் கொள்கின்றது. - என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலில் ஈரோஸ் ஜனநாயக முன்னணி உறுப்பினர்கள், மற்றும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை நல்லூரில் நாளை திறக்கப்படுகின்றது

வடக்கு மாகாணத்துக்கான சிறப்பு அபிவிருத்தி நிதிமூலத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை நாளை வெள்ளிக்கிழமை காலை 10.30க்கு வடமாகாண ஆளுநர் பி.ஸ்.எம். சார்லஸ் அவர்களால் வைபவ ரீதியாக திறந்து வைக்கப்படவுள்ளது .

நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி கலாநிதி அ.ஜெயகுமரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் பி.ஸ்.எம்.சார்ளஸும், சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண பிரதம செயலாளர் அ.பத்திநாதன் மற்றும் வடமாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் பா.செந்தில்நந்தனன் ஆகியோரும், கௌரவ விருந்தினர்களாக வடமாகாண சுகாதார பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் மற்றும் காணியை நன்கொடையாக வழங்கிய வைத்திய நிபுணர் ச.குகதாசன், திருமதி க.குகதாசன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில் விருந்தினர்களின் உரையும், சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையை கட்டுவதற்கு காணியை நன்கொடையாக வழங்கியோரை கௌரவிக்கும் நிகழ்வும் இடம் பெறவுள்ளன.

# மோ.சைக்கிளில் சென்ற இருவர் குரங்கு பாய்ந்ததால் படுகாயம்

மோட்டார் சைக்கிளில் பயணம் செய்த இருவர் மீது குரங்கு பாய்ந்ததால் இருவரும் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள சம்பவமொன்று நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

மட்டக்களப்பு, ஏறாவூர் பகுதியிலிருந்து மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருக்கும் போது கல்குடா பிரதான வீதியில் வைத்து எதிர்பாராத நிலையில் இருவர் மீது குரங்கு பாய்ந்ததால் இருவரும் நிலைகுலைந்து வீழ்ந்து கிடந்துள்ளனர்.

படுகாயமடைந்த இருவரும் சிகிச்சைக்காக வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அதிக நாடாளுமன்ற அமர்வுகளில் பங்கேற்ற இம்ரானுக்கு கௌரவம்!



திருகோணமலை மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளருமாகிய இம்ரான் மஹ்ரூப் அதிக நாடாளுமன்ற அமர்வுகளில் கலந்துகொண்டமைக்காக நாடாளுமன்ற உறுப்பினர்களின் செயற்பாடுகளை மதிப்பீடு செய்யும் **Manthri.lk** யினால் சான்றிதழ் மற்றும் பதக்கம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

கடந்த நாடாளுமன்ற காலத்தில் 90 வீதத்துக்கு அதிகமான நாடாளுமன்ற அமர்வுகளில் கலந்துகொண்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் இவ்வாறு கௌரவிக்கப்பட்டுள்ளனர். அதன்படி 225 முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களில் 15 முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இவ்வாறு கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

சிறுபான்மை சமூகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்களில் இம்ரான் மஹ்ரூப் மற்றும் முஜிபுர் ரஹ்மான் ஆகிய இருவர் மட்டுமே அதிக நாடாளுமன்ற அமர்வுகளில் கலந்துகொண்டு இந்தக் கௌரவத்தை பெற்றுள்ளனர் என்பது குறுப்பிடத்தக்கது.

# பொலிஸாரை டிப்பரால் மோதி விட்டு தப்பியவருக்கு 23 வரை விளக்கமறியல்



பொலிஸார் மீது டிப்பர் வாகனத்தால் வேண்டுமென்று மோதி விட்டு தப்பிச் சென்ற நபருக்கு விளக்கமறியல் விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த திங்கட்கிழமை இரவு ஹக்மன பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொங்கல வீதிச் சோதனைச்சாவடி கடமையில் ஈடுபட்ட பொலிஸார் மீது டிப்பர் வாகனமொன்று வேண்டுமென்று மோதிச் சென்றதில் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் உயிரிழந்திருந்தார். அத்துடன் மேலும் இருவர் காயமடைந்தனர்.

குறித்த டிப்பர் வாகனச் சாரதி, நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் ஹுங்கம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட, ரனால பிரதேசத்தில் வைத்துக் கைதுசெய்யப்பட்டார்.

குறித்த சந்தேகநபர் நேற்றுப் புதன்கிழமை மாத்தறை நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டபோது, அவரை எதிர்வரும் ஜூலை 23ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

அவருக்கு எதிராக கொலை, கொலை முயற்சி, கடமையிலுள்ள அதிகாரிகள் மீது சிறிய மற்றும் படுகாயம் ஏற்படுத்தியமை உள்ளிட்ட குற்றச்சாட்டுகள் தொடர்பிலும், வாகனத்தை அபாயகரமாக செலுத்தியமை, வலது புறமாக வாகனத்தை செலுத்தியமை உள்ளிட்ட போக்குவரத்து விதி மீறல்கள் தொடர்பிலும் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் ஹக்மன பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# ராஜபக்ஷக்களுக்கு அடிபணியாமல் தேர்தலை உடனே ஒத்திவையுங்கள்!

## ஆணைக்குழுவிடம் சஜித் மீண்டும் வலியுறுத்து

கொரோனா வைரஸ் மீண்டும் சமூகத்துக்குள் ஊடுருவி விட்டது என்பதை ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவரான இராணுவத் தளபதியே ஒப்புக்கொண்டுவிட்டார். கந்தக்காடு போதைப்பொருள் புனர்வாழ்வு நிலையத்தில் பணியாற்றுபவர்கள் விடுமுறையில் வீடுகளுக்குச் சென்றதால் கொரோனா மீண்டும் சமூகத்துக்குள் ஊடுருவியுள்ளது என்று இராணுவத் தளபதி தெரிவித்துள்ளார். எனவே, எதிரணியினரின் கருத்துக்களைப் புறந்தள்ளியுள்ள அரசும், தேர்தல்கள் ஆணைக்குழுவும் இராணுவத் தளபதியின் கருத்துக்களையும், அதேவேளை சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் ஏற்கனவே விடுத்துள்ள அறிவுரைகளையும் கவனத்தில் கொண்டாவது மக்களைப் பாதுகாக்க முன்வரவேண்டும். கொரோனா வைரஸ் தாக்கம் முடிவுக்கு வரும்வரை நாடாளுமன்றத் தேர்தலைப் பிற்போட வேண்டும்.

– இவ்வாறு வலியுறுத்தியுள்ளார் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

மக்களின் உயிர் பாதுகாக்கப்படுவதுடன் அவர்களின் ஜனநாயக உரிமையும் மதிக்கப்பட வேண்டும். அவர்கள் தமது ஜனநாயக உரிமையான வாக்குரிமையை ஓகஸ்ட் 5ஆம் திகதி சுகாதாரப் பாதுகாப்புடன் நிறைவேற்றுவது மிகவும் கடினம்.

தேர்தல் காலத்தில் அனைவரும் பின்பற்ற வேண்டிய சுகாதாரப் பாதுகாப்பு வழிகாட்டல்களை சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அரசிடம் சமர்ப்பித்துள்ளார். ஆனால், அதை வர்த்தமானி அறிவித்தலாக வெளியிட அரசு பின்னடிக்கின்றது. அதை வர்த்தமானி அறிவித்தலாக உடன் வெளியிடுமாறு அரசிடம் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் பல தடவைகள் கோரிக்கை விடுத்துள்ள போதிலும் அதை வெளியிடுவதில் அரசு தயக்கம் காட்டுகின்றது.

இப்படிப்பட்ட அரசு தேர்தலை எப்படிப் பாதுகாப்பாக நடத்த ஒத்துழைக்கும்? எனவே, தேர்தல்கள் ஆணைக்குழு இது தொடர்பில் தீர்க்கமான முடிவு எடுக்க வேண்டும். அரசின் அழுத்தங்களுக்கு அடிபணிந்து இன்னமும் 20 நாள்கள் தானே தேர்தலுக்கு இருக்கின்றன என்ற நினைப்பில் தேர்தலைப் பிற்போட தேர்தல்கள் ஆணைக்குழு பின்னடிக்கக்கூடாது.

தேர்தலுக்கு 5 நாள்கள் இருந்தால்கூட மக்களின் உயிரும் அவர்களின் ஜனநாயக உரிமையும் பாதுகாக்கப்பட்டு – மதிக்கப்பட்டு நல்லதொரு சூழ்நிலையில்தான் தேர்தலை நடத்த வேண்டும் என்று அரசிடமும் தேர்தல்கள் ஆணைக்குழுவிடமும் மீண்டும் மீண்டும் வலியுறுத்துகின்றோம் – என்றார்.

# சுதந்திரக் கட்சி தலைமைத்துவத்தை மஹிந்த மீண்டும் ஏற்கவேமாட்டார்!

## – நாமல் கூறுகின்றார்

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் பொறுப்பை மஹிந்த ராஜபக்ஷ மீண்டும் ஏற்கமாட்டார் என அவரின் மூத்த புதல்வனான நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.


மஹிந்த தொடர்ந்தும் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தலைவராக விளங்குவார் எனவும் நாமல் குறிப்பிட்டுள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராக மஹிந்த ராஜபக்ஷவை நியமிப்பதற்கான நடவடிக்கை எதுவும் இடம்பெறவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மஹிந்த தொடர்ந்தும் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தலைவராக நீடித்து கட்சியைப் பலப்படுத்துவார் எனவும் நாமல் ராஜபக்ஷ மேலும் தெரிவித்துள்ளார்.

# அதியுச்ச அதிகாரப் பகிர்வை தமிழருக்கு வழங்கவேண்டும்

## – விக்கிரமபாகு கடும் அழுத்தம்



தமிழ் மக்களுக்கு அதியுச்ச அதிகாரப் பகிர்வு வழங்கப்பட வேண்டும். இதனை மையப்படுத்தியதாகவே புதிய அரசமைப்பு இயற்றப்பட வேண்டும்.

– இவ்வாறு நவசமசமாஜக் கட்சியின் தலைவரும் ஐக்கிய தேசியக் கட்சியின் களுத்துறை மாவட்ட வேட்பாளருமான கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

தேசிய இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வுத் திட்டமாகவே 13 ஆவது திருத்தச் சட்டம் முன்வைக்கப்பட்டது. ஆனால், குறித்த சட்டத்தில் இருந்த அதிகாரங்கள் முழுமையாகப் பகிரப்படவில்லை. பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்கள் தடுக்கப்பட்டன. எனவே, 13ஆவது திருத்தச் சட்டம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாக இருக்கின்றது.

ஆனால், அதியுச்ச அதிகாரப் பகிர்வைத் தடுப்பதற்கும் 13 ஆவது திருத்தச் சட்டத்தில் மாற்றம் கொண்டு வருவதை இலக்காகக்கொண்டும் புதிய அரசமைப்பு இயற்றப்பட வேண்டும் என்ற கருத்து ராஜபக்ஷ தரப்பில் இருந்து வந்துள்ளது. இதனுடன் எமக்கு உடன்பட முடியாது.

அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும். எந்தத் தரப்பு புதிய அரசமைப்பை இயற்றினாலும் கூட அதில் அதிகாரப் பகிர்வு உறுதிப்படுத்தப்பட வேண்டும். புதிய அரசமைப்பை இயற்றுவதற்குக் காலம் எடுக்குமானால் அதன் முதற்கட்டமாக 13 ஆவது திருத்தச் சட்டம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் – என்றார்.

# தமிழ்த் தேசிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முஸ்லிம் ஆதரவாளர் வட்டம் .

யாழ். ஊடக மன்றத்தில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டின்போது அதன் ஒருங்கிணைப்பாளர் என்.எம். அப்துல்லாஹ் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்–

2020 நாடாளுமன்றத் தேர்தலில் வடக்கு முஸ்லிம்களின் வாக்குகள் ஒரு செய்தியை சுமந்ததாக இருக்கவேண்டும் என நாம் நம்புகின்றோம். 'மிக நீண்டகாலமாக இழுத்தடிப்புச் செய்யப்படுகின்ற எமது மக்களின் மீள்குடியேற்றம் மற்றும் வடக்கின் தமிழ் பேசும் மக்களாக நல்லிணக்கத்தை கட்டியெழுப்புவதற்காக தமிழ் – முஸ்லிம் மக்கள் ஐக்கியமாகுதல் என்ற இரண்டு விடயங்கள் எமது சிந்தையை ஈர்க்கின்றன.

கடந்த காலங்களில் ஆட்சியில் இருந்தவர்கள் எங்களுடைய மக்களின் மீள்குடியேற்ற விவகாரத்தில் ஒழுங்கமைக்கப்பட்ட செயற்பாடுகள் எதனையும் முன்னெடுக்கவில்லை என்ற குற்றச்சாட்டு எமது மக்களிடம் பரவலாக இருக்கின்றது. மீள்குடியேற்றத்திற்கான அடிப்படைகளை ஏற்படுத்துதல், திட்டமிடல்களை உருவாக்குதல், வளங்களை ஒருங்கிணைத்தல் போன்ற பல்வேறு விடயங்கள் இன்னமும் உரியமுறையில் அணுகப்படவில்லை. எனவே பாதிக்கப்பட்ட வடக்கு மக்களாக எம்மையும் அடையாளப்படுத்தி வடக்கின் மக்கள் அனைவருக்குமான பொதுவான மீள்குடியேற்ற செயற்றிட்டத்தோடு வடக்கு முஸ்லிம் மக்களும் உள்வாங்கப்படவேண்டிய தேவையை நாம் உணர்கின்றோம். அதற்கான தலைமைத்துவத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினாலேயே வழங்க முடியும்.

நாட்டில் உள்ள தற்போதைய அரசியல் நிலைமைகளை அவதானிக்கின்றபொழுது இலங்கை என்ற ஒரு சிறப்பான, பல்லின மக்களும் வாழக்கூடிய அமைதியான ஒரு நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு எல்லா மக்களும் ஒன்றுபட வேண்டிய தேவை முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு தற்போது ஏற்பட்டிருக்கின்றது. இந்த சந்தர்ப்பத்தில் இந்த நாட்டின் தமிழ் பேசும் மக்களாக தமிழ் – முஸ்லிம் மக்கள் நாம் எல்லோரும் ஒன்றிணைய வேண்டியிருக்கின்றது. அதற்கான தலைமைத்துவத்தை தமிழ் தேசியக் கூட்டமைப்பு வழங்கும். மேலும் தமிழ் மக்களின் ஜனநாயக வழிமுறைக்கூடான உரிமைப் போராட்டத்தில் வடக்கு முஸ்லிம்களாகிய நாமும் பங்கெடுக்க விரும்புகின்றோம். அவ்வாறே வடக்கில் தமிழ் பேசும் மக்களாக தமிழ் – முஸ்லிம் மக்கள் இணைந்து இத் தேர்தலில் ஒரு விசேட தீர்மானத்தை எடுக்க வேண்டிய அவசியத்தில் இருக்கின்றோம்.

எனவே மேற்கூறிய விடயங்களின் அடிப்படையில் வடக்கு முஸ்லிம் மக்கள் இம்முறை தமது வாக்குகளை 'தமிழ் மக்கள் நீண்டகாலமாக ஆதரித்து மக்கள் ஆணையை (வாக்குகளை) வழங்கிவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு – வீட்டுச் சின்னத்திற்கு' வழங்குவதனூடாக ஒரு முன்மாதிரிமிக்க நகர்வை முன்னெடுக்க முடியும் என நாம் நம்புகின்றோம்.

இவ்வாறான ஒரு தீர்க்கமான முடிவினை நாம் பின்வரும் நியாயப்பாடுகளின் அடிப்படையில் முன்னெடுக்க முடியும்.

1. இலங்கை முஸ்லிம் மக்களை ஒரு தனியான இனத்துவமாகவும், இறைமை அதிகாரமுள்ள மக்களாகவும், சுயநிர்ணய உரித்துடையவர்களாகவும் அரசியல் பரப்பில் அறிமுகப்படுத்திய பெருமை தந்தை செல்வா அவர்களையே சாரும். இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் யாப்பிலே இது மிகவும் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த அடிப்படைகள் முஸ்லிம் அரசியலுக்கான அடித்தளமாக அமைந்திருக்கின்றது.

2. முஸ்லிம் மக்களின் உரிமைக்காகவும், இன்றுவரை குரல்கொடுக்கின்ற அமைப்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு செயற்பட்டு வருகின்றது.

3. வடக்கின் பெரும்பான்மை மக்களின் ஆதரவைப் பெற்ற வடக்கின் ஆளும் தரப்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே காணப்படுகின்றது.

4. வடக்கு முஸ்லிம்கள் தமிழ் மக்களுடனான நல்லிணக்கத்தை வலுப்படுத்திக்கொள்வதன் ஊடாக நாட்டில் சிறுபான்மையினருக்கு எதிராக அவ்வப்போது மேற்கொள்ளப்படும் சதிகளுக்கு எதிராக ஒரு பலமான சக்தியாகச் செயற்படும் வாய்ப்பு ஏற்படும்.

இவ்வாறான நியாயப்பாடுகளின் அடிப்படையில் வடக்கு முஸ்லிம் மக்களாகிய நாம் தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்கும், அதன் வேட்பாளர்களுக்கும் நல்லாதரவை வழங்குவோம்.

வடக்கு முஸ்லிம் மக்கள் 2020 பொதுத் தேர்தலில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வீட்டுச் சின்னத்திற்கு வாக்களிப்போம். தமிழ் பேசும் மக்களாக ஒன்றினைவோம். வடக்கின் மக்களாக எழுவோம் – என்றார்.

இந்த ஊடக மாநாட்டில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முஸ்லிம் ஆதரவாளர் வட்டத்தின் தலைவர் எம்.யூ.எம். தாஹிர், செயலாளர் ஏ.சி.எம். மஹானாஸ், ஒருங்கிணைப்பாளர் என்.எம். அப்துல்லாஹ், உறுப்பினர் ஏ.சி. நைசர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# 2004 தேர்தலில் சம்பந்தனும், மாவையும்தான் ஜனநாயகத்தைக் குழிதோண்டிப் புதைத்தார்கள்

## சங்கரி காட்டம்; சிறீதரனுக்கு சிலை வைப்பாராம்

(கலையமுதன்)

யாழ்ப்பாணம், ஜூலை 16

2004 ஆம் ஆண்டு ஜனநாயகத்தை குழிதோண்டி புதைத்தவர்கள் சம்பந்தனும், மாவை சேனாதிராஜாவும் தான் என தமிழர் விடுதலை கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி குற்றம் சுமத்தியுள்ளார்.

நேற்று யாழ் ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்ட வீ.ஆனந்தசங்கரியிடம், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் தான் அச்சமயம் 75 கள்ள வாக்குகள் போட்டேன் என தெரிவித்த கருத்து தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதில் வழங்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் -

சிவஞானம் சிறீதரன் படத்தை வைத்து நான் பூப்போட்டுக் கும்பிடலாம் என இருக்கின்றேன். அவர் கொஞ்சம் சொல்லி விட்டார். மிகுதியையும் சொன்னால் நல்லது. சம்பந்தர் கள்ள வாக்கு போடவில்லையா? மாவை சேனாதிராஜா போடவில்லையா? அவர் சொன்ன அதே தேர்தலில் 2004 ஆம் ஆண்டு மாவை சேனாதிராஜா காலையில் தோற்று மாலையில் எம்.பியாக வரவில்லையா?

அனைத்து விடயங்களையும் சிறீதரன் சொன்னால் நான் போட்டி இல்லாமல் அவரை நாடாளுமனற உறுப்பினராக ஆக்குவேன். சிறீதரனுக்கு இந்த நாடு கடைமைப்பட்டுள்ளது. இன்னும்




சொல்லப் போனால் 2004 ஆம் ஆண்டு சம்பந்தரும் சேனாதிராஜாவுமே ஜனநாயகத்தை குழிதோண்டி புதைத்தார்கள்.

அந்த காலத்தில் சிறீதரன் சின்ன பெடியன் பேசாமல் இருந்துவிட்டு இப்போது புத்தி வந்து விசயத்தை சொல்லுகிறார். மீதமுள்ள விடயத்தையும் சொன்னால் என் மனது முழுமையாக சந்தோசமடையும். 2004 ஆம் ஆண்டு தடம் புரண்ட ஜனநாயகம் இன்னும் திரும்பி வரவில்லை. அந்த ஜனநாயகத்தை மீட்டெடுத்த பெருமை சிறீதரனை சாரும். நான் அவருக்கு சிலை வைப்பேன். - எனவும் தெரிவித்துள்ளார்.

# களப் பிரசாரத்தில் சுரேந்திரன்







தமிழ் தேசிய கூட்டமைப்பின் யாழ். மாவட்ட வேட்பாளர் குருசுவாமி சுரேந்திரனோடு அறிவார்ந்த சமூகத்தைச் சேர்ந்தவர்களும் கல்விமான்களும் புத்திஜீவிகளும் சேர்ந்து அணி திரளத் தொடங்கியிருக்கின்றனர் என அவரது ஊடகப் பிரிவு விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ் பல்கலைக் கழகத்தின் முன்னாள் வணிக பீடாதிபதி பேராசிரியர் தேவராசா, குருசுவாமி சுரேந்திரனுடன் இணைந்து, நேற்று மக்களிடம் நேரடியாகச் சென்று வாக்குகள் சேகரிக்கும் பணியில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது என அச்செய்திக் குறிப்பு தெரிவித்தது.

தமிழ் தேசியக் கூட்டமைப்பு இதுவரை பயணித்து வரும் தீர்வு சம்பந்தமான பயணத்தோடு, தற்சார்பு பொருளாதாரம் ஒன்றையும் கட்டியெழுப்ப வேண்டும் என்ற கொள்கை திட்டத்தின் அவசியத்தை உணர்ந்த கல்விமான்களும் புத்திஜீவிகளும் குருசுவாமி சுரேந்திரனை அண்மைக்காலமாக ஆதரிக்க தொடங்கியிருக்கிறார்கள். இவ்வாறு அறிவார்ந்த சமூகத்தை சேர்ந்தவர்களான பல கல்விமான்களும் புத்திஜீவிகளும் அவரை ஆதரிப்பது தமிழ் சமூகத்திற்கு நல்ல ஒரு ஆரோக்கியமான விடயமாக கருதப்படுகிறது – என்றும் தெரிவிக்கப்பட்டது.

# புளொட்டின் வீர மக்கள் தினம் மட்டக்களப்பில் அனுஷ்டிப்பு

ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் (புளொட்) மட்டக்களப்பு கிளையின் ஏற்பாட்டில் அக்கழகத்தில் உயர்நீத்த வீரர்களின் நினைவாக அனுஷ்டிக்கப்படும் வீரமக்கள் தினத்தின் 31வது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்று மட்டக்களப்பு நாவற்குடாவில் அமைந்துள்ள கட்சி அலுவலகத்தில் கட்சியின் செயற்பாட்டாளரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட வேட்பாளருமாகிய மு.ஞானப்பிரகாசம் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் முன்னாள் கிழக்கு மாகாணசபையின் உபதவிசாளரும் ரெலோ அமைப்பின் உபதலைவருமான பிரசன்னா இந்திரகுமார், ஈ.பி.ஆர்.எல்.எவ். பத்மநாபா மன்றத்தின் தலைவரும், முன்னாள் கிழக்கு மாகாணசபை உறுப்பினருமான இரா. துரைரெட்ணம், புளொட் அமைப்பின் மட்டக்களப்பு செயற்பாட்டாளர்களான மண்முனை மேற்குப் பிரதேசசபையின் உபதவிசாளர் பொ.செல்லத்துரை, மட்டக்களப்பு மா நகரசபை உறுப்பினர் ம.நிஸ்கானந்தராஜா, ந.ராகவன், போரதீவுப்பற்றுப்பிரதேசசபையின் பிரதித் தவிசாளர் நா.தருமலிங்கம், மண்முனை




தென் எருவில் பற்றுப் பிரதேசசபை உறுப்பினர் க.சரவணமுத்து, கா.கமலநாதன் மற்றும் கட்சியின் தோழர்கள், அபிமானிகள், உயிர்நீத்த தோழர்களின் குடும்பத்தினர் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இதன் போது புளொட் அமைப்பின் செயலதிபர் உமாமகேஸ்வரன் மற்றும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் அ.அமிர்தலிங்கம் உட்பட அமைப்பின் உயிர்நீத்த தோழர்களின் உருவப் படங்களுக்கு ஈகைச் சுடரேற்றி மலர்தூவி அஞ்சலி செலுத்தப்பட்டதுடன், அகவணக்கம் செலுத்தப்பட்டது.

# நீரோடையில் மிதந்து வந்தது ஒரு நாள் பெண் சிசுவின் சடலம்

நீரோடையில் மிதந்து வந்த – பிரசவமாகி ஒரு நாள் பெண் சிசுவொன்றின் சடலத்தை வெலிமடைப் பொலிஸார் நேற்று மீட்டுள்ளனர்.

வெலிமடைப் பகுதியின் வக்கடஹின்ன நீரோடையிலேயே, மேற்படி சிசுவின் சடலம் மீட்கப்பட்டது.

இந்த வக்கட ஹின்ன நீரோடை நுவரெலியா எல்லையிலிருந்து ஆரம்பித்து, வெலிமடைப் பகுதியின் உமா ஓயா ஆற்றில் சங்கமமாகின்றதென்பதும் குறிப்பிடத்தக்கது.

இறந்த சிசுவின் தாயைத் பொலிஸார் தேடி வருகின்றனர் என்றும், விரைவில் சிசுவின் தாயைக் கண்டுபிடித்து கைது செய்ய முடியும் என்றும் வெலிமடைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எய்ச்.எம். ஹேரத் தெரிவித்தார்.

மீட்கப்பட்ட சிசு, கதகதப்பான உடையிலும் பொலிதினினாலும் சுற்றப்பட்ட நிலையிலிருந்ததாகவும், கிடைக்கப்பெற்ற தகவலொன்றினையடுத்தே, அது மீட்கப்பட்டது என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# நுவரெலியாவில் 21இல் கோட்டாபய பிரசாரம்

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எதிர் வரும் 21 ஆம் திகதி நுவரெலியா மாவட் டத்துக்கான தேர்தல் பிரச்சார பயணத்தை மேற்கொள்ளவுள்ளார்.

இந்தத் தகவலை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் நிதிச்செயலாளரும், ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான கூட்டணியின் நுவரெலியா மாவட்ட வேட்பாளருமான மருதபாண்டி ராமேஷ்வரன் உறுதிப்படுத்தினார்.

ரீலங்கா பொதுஜன பெரமுனவின் சார்பில் நுவரெலியா மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து பிரசாரம் செய்வதற்காக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கடந்த 13 ஆம் திகதி நுவரெலியா மாவட்டத்துக்கான பயணத்தை முன்னர் மேற்கொள்ளவிருந்தார்.

# அஞ்சல் வாக்குச் சீட்டை படம் எடுத்தவர் சிக்கினார்

மொனராகலை, தனமல்விலை இ.போ.ச. டிப்போ செயலகத்தில் அஞ்சல் வாக்கைச் செலுத்திய நபரையும், அஞ்சல் வாக்குச் சீட்டையும் தொலைபேசி மூலம் படம் எடுத்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார். இச்சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.

தனமல்விலை இ.போ.ச. டிப்போ பணியகத்தில் தேர்தல் கடமைகளில் ஈடுபட்டிருந்த தேர்தல் உத்தியோகத்தர்கள் மற்றும் கடமையிலிருந்த பொலிஸாரின் உதவியுடனேயே இந்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்ட நபர், தனக்கு எதிராகச் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டினை ஏற்றுக்கொண்டமையுடன், படம் எடுக்கக் கூடாதென்று தமக்குத் தெரியாதென்றும், தனக்கு மன்னிப்பு வழங்கும்படியும் விநயமாகக் கேட்டுக் கொண்டமக்கமைய, எச்சரிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டார். அத்துடன், அந்தப் படங்கள் கையடக்கத் தொலைபேசியிலிருந்து அகற்றப்பட்டன.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 16.07.2020 இல் வெளியிடப்பெற்றது.